ஆதரவாளர்களுக்கு
எமது
பொங்கல்
வாழ்த்துக்கள்
அருணா
ஏஜென்ஸீஸ்
அளவெட்டி. 2177

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 (14-1-67) இதழ் 335

பராபவ ஷவ்வால் 2 தை 1 சனிக்கிழமை

உயர்ந்த இனக்குஞ்சுகள்
பதிவு செய்யாது
பெற்றுக் கொள்ளலாம்
Sykes — Sterling
Hyline — Thorner
ARUNA AGENCIES
ALAVEDDY. 2178

## புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். சுடப்பட்டதன் எதிரொலி

# சென்னையில் கூட்டம் ஊர்வலங்கட்கு தடை

## சுட்ட, சுடுபட்ட நடிகர் இருவரும் குணமடைகின்றனர்

சென்னை, ஜன. 13

**துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும், நடிகர் எம். ஆர். ராதாவும் நேற்றிரவு நடைபெற்ற அவசர சத்திர சிகிச்சையின் பின்னர் குணமடைந்து வருவதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.**

ஒரு திரைப்படம் சம்பந்தமாக எழுந்த தகராறில் புரட்சி நடிகர் ராமச்சந்திரனை நடிகர் ராதா கைத்துப்பாக்கியால் நேற்றுமாலை சுட்டதில் எம். ஜி. ஆர். காயமடைந்தார். இதன் பின் தம்மைத் தாமே சுட்டுக்கொண்ட ராதா முன்நெற்றியிலும் காயமேற்பட்டது. இச்சம்பவம் நடைபெறும்பொழுது திரைப்படத் தயாரிப்பாளர் வாசு அங்கிருந்தார். காயமடைந்த இருவரும் உடனடியாக ராயப்பேட்டை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு இருவருக்கும் அவசர சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

### யாருடையது?

யாழ்ப்பாணத்தில் ஒரு பேர்ஸ், பேனை, டயறி ஆகியவற்றை திரு. வி. எம். அப்புசாமி கண்டெடுத்து ஈழநாட்டில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் தகுந்த அத்தாட்சியுடன் இவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

## ஜனக்கூட்டத்தைக் கலைக்க பொலிசார் தடியடி

எம். ஜி. ஆர். சுடப்பட்டுக் காயமடைந்ததும், எம். ஆர். ராதா தம்மைத்தாமே சுட்டுக் காயமடைந்ததும் பற்றிய செய்தி நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையின் சில பதிப்புகளில் வெளிவந்தது வாசக நேயர்களுக்கு நினைவிருக்கும்

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனை நடிகர் எம். ஆர். ராதா கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டதாகவும் ராதா தம்மைத் தாமே சுட்டுக் காயப்படுத்திக் கொண்டதாகவும் இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் காட்டுத்தீ போல் செய்தி பரவியது. இதைத் தொடர்ந்து ராயப்பேட்டை ஆஸ்பத்திரியின் முன் பெருந்திரளான மக்கள் திரண்டனர். ஆஸ்பத்திரிக்குள்ளும் ஜனக்கூட்டம் நுழைய எத்தனித்தது. ஜனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் அவர்களை அங்கிருந்து அமைதியாக அகற்றவும் பொலிசார் எடுத்த முயற்சிகள் பலனற்றுப் போயின. ஜனக்கூட்டம் கட்டுக்கடங்காமல் போகவே பொலிசார் கூட்டத்தைக் கலைக்க தடியடிப் பிரயோகம் செய்தனர். அதனாலும் பயன் கிடைக்காது போகவே பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். கூட்டத்தினர் பொலிசார் மீது கற்களை வீசியதில் பொலிஸ்கான்ஸ்டபிள்கள் சிலர் காயமடைந்தனர்.

## எஸ்.ஜே.வி.க்கு பிரதமர் கடிதம்

### ஒலிபரப்புச் சபையில் தமிழர் நியமிக்கப்படுவார்

கொழும்பு, வெள்ளி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன சபையில் தமிழர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படுவாரென்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு உறுதியளித்துள்ளார்.

திரு. செல்வநாயகம் எழுதியிருந்த ஆட்சேபக் கடிதத்துக்கு எழுதியுள்ள பதிலில் தான் பிரதமர் இவ்வாறு உறுதியளித்திருக்கிறார்.

கோடீஸ்வரன் அப்பீல் வழக்கில் சிரேஷ்ட வழக்கறிஞராக இருக்கும் திரு. எஸ். வி. அரங்கநாதன் கியு. ஸி. தமிழ்ப் பகுதியின் நலனைக் கவனிப்பதற்கென ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன சபையில் ஓர் அங்கத்தவராக நியமிக்கப்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நகரில் கூட்டங்கள், ஊர்வலங்களுக்குத் தடை

எம் ஜி ஆர் ராதா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து நகரில் அமைதிக்குப் பங்கம் ஏற்படலாமென பொலிசார் அஞ்சி சென்னை பொலிஸ் அதிபர் திரு. எஸ். வி. அருள், நகரில் ஊர்வலங்கள், கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடைவிதித்திருக்கிறார் இத்தடை உத்தரவு பதினைந்து

(8-ம் பக்கம் பார்க்க)

திருகோணமலை

## நகரசபைத் தலைவராக சிவானந்தன் மீண்டும் தெரிவு

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை நகரசபையின் புதிய தலைவராக டாக்டர் எஸ். சிவானந்தன் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

டாக்டர் எஸ். சிவானந்தன் இம்முறையுடன் மூன்றாவது தடவையாகத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைவர் பதவிக்கு டாக்டர் தம்பையாவின் பெயர் பிரேரிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஆமோதிக்கப்படவில்லை.

மனோஹரா
(14 - 1 - 67)
மகத்தான பொங்கல் வெளியீடு
கிளியோபட்ரா
அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா அவர்களால் பிற்பகல் 2-30 மணிக்கு திறப்பு விழா வைபவம் சிறப்பிக்கப்படும்.
(2-30 காட்சி அழைப்பாளர்களுக்கு மட்டும்)
பல்கனி ஆசனங்களுக்குரிய ரிக்கட்டுகள் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளலாம்.
தினசரி காட்சிகள் 3-45, 7-00, 10-00.
போயா தினத்திலும் அதற்குமுதல் நாளும் காலை 10-30 க்கும்.

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம
தொலைபேசி: 518
தந்தி: ''யப்பான்''

சிறந்த அலுமினிய பாத்திரகளுக்கு




டொலர்
அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்!
இனம் பிரிக்காத ஒருநாள் குஞ்சுகள் Unsexed) பதிவு செய்யாது பெற்றுக் கொள்ளலாம். விலைசதம் எழுபத்தைந்து (75) அடு ற ஏஜன்சீஸ், அளவெட்டி. 2207

வான்
A 30 டிவிஷன் வான். C V 5018. நல்ல நிலையில். தேவின் வரவும். கே. இராசலிங்கம், 28, நீராவியடி, யாழ்ப்பாணம். 2242

சங்கீதக் கருவிகள்!
வயலின், சுருதிப்பெட்டி, ஹார்மோனியம், கிற்றார், முதலிய இசைக் கருவிகளும் அவற்றுக்கான உறுப்புக்களும் நிதானமான விலைக்கு விற்கப்படும். 32, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2311

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு சிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்ற லோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் சுகிபூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

வீடு!
வண்ணார்பண்ணை வைத்திஸ்வர வித்தியாசாலைக்கு சமீபமாக சகல வசதிகளுடன் ஐஹான் மன்சில் கட்டிடத்தில் அறைகள் உண்டு. அணுகவும்: 5, ஸ்ரான்லி வீதி, மொம்சாக் கட்டடம், யாழ்ப்பாணம். 2097

### தேவை

வேலை
அனுபவமுள்ள டிரைவருக்கு சொந்தக்கார வைத்தியிடமவரிடம் கார் ஓட்டும் வேலை தேவை. சி. வெற்றி வேலு "ஜெயதேவிவாசா" புலோலி மேற்கு, பருத்தித்துறை. 2247

...உடுப்பிட்டி, வியாபாரமாரட்சிப் பகுதியில் உள்ள பல கல்லூரிகளிலும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. பல பாடசாலைகளிலும் பிள்ளைகள் குறைவாகவே அனுமதிக்கப்படுகிறார்களாம். இதனால் பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை எந்தக் கல்லூரிகளிலும் சேர்க்க முடியாது தவிக்கின்றனர்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Melina Mercouri
Peter Ustinou
in
TOPKAPI
(Eastman Color)

மனோகரா தியேட்டர்
நெல்லியடி
போயாதினமும் முதல் நாளும் காலை 10 மணி மெட்னி
S.S.R. — விஜயகுமாரி
நடித்த
வழிகாட்டி

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் Jaffna
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — பானுமதி
நடித்த
காஞ்சித் தலைவன்

யாதவா
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எஸ்.எஸ்.ஆர். - சுந்தராம்பாள்
நடித்த
பூம்புகார்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்-கே. ஆர். விஜயா
நடித்த
பணம் படைத்தவன்


# இந்திய தேர்தல் அரங்கு

### அன்பழகன் போட்டி

தி. மு. கழகத்தைச் சேர்ந்த தலைவர் அன்பழகன் சேலம் மாவட்டம் திருச்செங்கோடு தொகுதியில் இந்து டில்லி சபைக்குப் போட்டியிடுகிறார்.

### காங்கிரஸ் தோற்காது!

"கிருஷ்ணமேனன் காங்கிரஸில் இருந்து விலகியதால் பம்பாயில் காங்கிரஸ் தோற்றுவிடாது" என்று உள்நாட்டு மந்திரி சவான் கூறியுள்ளார்.

### டி. டி. கே.

'தேர்தலில் போட்டியிட மாட்டேன்! என் முடிவு மாறாது!' இவ்வாறு பழைய நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்துள்ளார்.

### வலது-இடது கம்யூனிஸ்ட்

இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் பி. ராமமூர்த்தியை எதிர்த்து மதுரை பார்லிமெண்ட் தொகுதியில் வலதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் கே. டி. கே. தங்கமணி போட்டியிடுகிறார்.

### மாணவர் எதிர்ப்பு!

முதல் மந்திரி பக்தவத்சலம் தொகுதிக்கு மாணவர்கள் படையெடுத்துச் சென்றுள்ளனர். அங்கு, பக்தவத்சலத்துக்கு எதிராக ஓட்டு வேட்டையாடிவருகிறார்கள்

### இந்தி வெறியர்

டில்லி அரசாங்க பழைய நிதிமந்திரி நந்தாவை எதிர்த்து, இந்திவெறியர் ரமேஸ்வர் ஆனந்த் போட்டியிடுகிறார்.

### மொராஜி தேசாய் பிடிவாதம்

ஐதராபாத் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மொரார்ஜி தேசாய் கலந்து கொண்டு இந்தியில் பேசினார். உடனே கூட்டத்தினர் ஆங்கிலத்தில் பேசும்படி கூறினார்கள். அதற்கு, மொரார்ஜிதேசாய் மறுத்துவிட்டார். "இந்தியாவின் நூற்றுக்கு இரண்டு பேர்களுக்குத்தான் ஆங்கிலம்தெரியும். ஆகையால் மீதமுள்ள 98 பேர்களின் தன்னன்மைதான் முக்கியமானது" என்றார் அவர்.

### திருவொற்றியூர்

சென்னை நகரிலுள்ள திருவொற்றியூர் தான் தமிழ் நாட்டிலேயே அதிக ஓட்டுச்சாவடிகள் (அதாவது 134) இருக்கும். திருவொற்றியூர் தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,13,840.

## அரசாங்க அதிபருக்கு கோரிக்கை

மானிப்பாய், வெள்ளி
மானிப்பாய்ச் சந்தையில் காய்கறி மீன் உணவுப் பொருட்கள் சங்கானை, மருதனுமடம், சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகியசந்தைகளிற் காணப்படும் விலையிலும் மிகக் கூடுதலான விலைக்கு விற்கப் படுகிறதாம். உடனடியாக இதில் அரசாங்க விற்பனை இலாகா இவ்வொன்றை நிறுவவேண்டும் அல்லது குறைந்த விலையில் உணவுப்பொருட்களை பெறுவதற்கு விற்பனை இலாகாவின் வான்களாவது மானிப்பாய்ச் சந்தைக்கு வர வேண்டும் என்று கோரி இளைஞர் நலஉரிமைச்சங்கம் பாழ். அரசாங்க அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

### ம. பொ. சி.

"காங்கிரஸ் தரைதட்டிய கப்பல் போல் விட்டது. இனி அதை மிதக்க விட முடியாது." இவ்வாறு மா. பொ. சி. கூறியிருக்கிறார்.

### இந்திரா

"ஜனநாயகத்தைக் காப்பாற்ற காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று மைசூரில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல் கூட்டத்தில் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி கூறினார்.

### ஊட்டி காங்கிரஸ

ஊட்டியில், நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் உட்பட 11 பேர் காங்கிரஸிலிருந்து ராஜினாமா செய்து விட்டார்கள்.

### இளைஞர் பேரணி!

"234 தொகுதிகளிலும் 'இளைஞர் பேரணி' நடத்துவோம் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

### ஆதரவு இல்லை

வட கிழக்கு பம்பாய் லோக சபைத் தொகுதியில் கிருஷ்ணமேனனுக்கு அனுகூலமாக இருக்கும் பொருட்டு சுதந்திரக்கட்சி தனது அபேட்சகரை வாபஸ் வாங்கிக் கொள்வது பற்றி ஆலோசித்து வருகிறது என்று வெளியான செய்திகளை சுதந்திரக் கட்சித் தலைவர் எம். ஆர். மஸானி மறுத்துள்ளார். சுதந்திரக்கட்சி அபேட்சகரை வாபஸ் பெறுவதாக முடிவு செய்தாலும் அது மேனனை ஆதரிப்பதற்காக இருக்காது என்று அவர் கூறினார்.


## மலிவு விற்பனை

31-1-1967
வரைக்கும்
மூக்குக் கண்ணாடிகள்
பிறேம்கள்
முதலியன
25% சதவீதம் கழிவுடன்
விற்பனையாகிறது.
பல் வேலைகளுக்கும்
அரைச்சலார்
எஸ். எம். பெர்ணுண்டோ
18, பிரதான வீதி,
1-ம் குறுக்குத்தெருச் சந்தி
யாழ்ப்பாணம். 1051


### அறிவித்தல்

வரெழுப் பிள்ளையார் கோவில் தேர்முட்டிக் கட்டிட நிதிச்சீட்டிழுப்பு, குறிப்பிட்டபடி 14-1-67ல் நடைபெறாது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.
சீட்டிழுப்பு 24-2-67 பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

வ. தர்மலிங்கம்
திருப்பணிநிதிக்காரியதரிசி
2180

### மணிவாசகர் சனசமூகநிலையம்

காரைநகர், வெள்ளி
மூன்று வருடங்களாகச் செயல்படாதிருந்த காரைநகர் மணிவாசகர் சனசமூக நிலையம் பொங்கலுடன் திரும்பவும் செயல்படவிருக்கிறது. உத்தியோகத்தர்கள் பின்வருமாறு;- தலைவர் க. சாம்பவமூர்த்தி, உபதலைவர் க. நடராசா, செயலாளர் செ.பதிகுணம், உபசெயலாளர்: ஆ. தனபாலசிங்கம், பொருளாளர்: க.கந்தையாபிள்ளை, உபபொருளாளர்: ந. திருக்குமரன், ஒன்பது பேரைக்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

### போயாதினவிழா

நெடுந்தீவு, வெள்ளி
நெடுந்தீவு மாவித்தியாலயத்தில் நெடுந்தீவு காரியாதிகாரி சோ. அருணாசலம் தலைமையில் போயாதின விடுமுறையையும் மனிதஉரிமைத்தினத்தையும் கொண்டாடும் பொருட்டு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் ஆ. வேலுப்பிள்ளை, உ.த. ஞானப்பிரகாசம், நா. குருநாதி, க. இரத்தினசபாபதி, இரா. சின்னத்தம்பி. செல்வி வே. சேதுப்பிள்ளை, வண. பிதா. ஜே. என். சாமுவேல் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது. சங்கீதபூஷணம் திரு. வி. சுந்தரலிங்கம் நன்றிகூறினார்.


## இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | ராஜ் (நீர்கொழும்பு) | நவா (கொட்டாஞ்சேனை) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீ [illegible] (திருமலை) |
| மோடேர்ன் (பதுளை) | லக்ஷ்மி (ரத்னபுரி) | விஜிதா (ஹட்டன்) |

ஆண்டவன் உலகத்தின் முதலாளி. அவனுக்கு நான் ஒரு தொழிலாளி. அன்னை உலகின் மடியின் மேலே அனைவரும் எமது கூட்டாளி.



எம்.ஜி.ஆர். - கே.ஆர். விஜயா
எம். ஆர். ராதா, அசோகன், நம்பியார்,
நாகேஷ், மனோரமா
நடித்த
தேவர் பிலிம்ஸ்
# தொழிலாளி
டைரக்ஷன்: திருமுகம்.
இசை: திரையிசைத் திலகம் கே.வி. மகாதேவன்

ரசிகப் பெருமக்களுக்கும், அன்பர்கள், ஆதரவாளர் அனைவருக்கும்
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்
ஸ்தாபனத்தாரின் அன்புகலந்த
## பொங்கல் வாழ்த்துக்கள்!
எமது திரைகளில் விரைவில் காட்சியளிக்க விருக்கிறது
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
தங்கவேலு - நாகேஷ்
மற்றும்பலர் நடிக்கும்
# பெண்ணே நீ வாழ்க!

| | | |
|---|---|---|
| ராஜா டாக்கீஸ் | எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் | சாந்தி சினிமா |
| யாழ்ப்பாணம், போன்: 7180 | 109, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு |

உரிமையாளர்: :: :: ரி. எஸ். தியாகராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன இராணுவத்தில் களையெடுப்பு; 'புரட்சிகள்' நசுக்கப்பட்டுள்ளதாம்

## இராணுவத்திலுள்ள ஒரு பிரிவு மீது புரட்சிக் குற்றச்சாட்டு

பீகிங், ஜனவரி 13

மா-ஸே-துங்குக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப் புரட்சிகள் "விசுவாசமுள்ள படைகளினால்" நசுக்கப்பட்டுவிட்டன என்றும், களையெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றனஎன்றும் பீகிங் வானொலி அறிவித்துள்ளது.

பீகிங்கிலும், ஷங்காயிலும் மா-ஸே-துங்குக்கு ஆதரவு தெரிவித்து நேற்று பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இதில் லட்சக்கணக்கானவர்கள் கலந்துகொண்டதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்துள்ளன.

சீனாவில் ஏற்பட்டுள்ள குழப்பமான நிலையைச் சமாளிக்கும் முதல் நடவடிக்கையாகச் சீனத்தலைவர் மா-ஸே-துங் சீன இராணுவத்தில் களையெடுப்பு மேற்கொள்ள இருக்கிறார்.

"இராணுவத்தில் கலாச்சாரப் புரட்சி இடம்பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்த கோஷ்டியை இராணுவத்திலிருந்து வெளியேற்றுவதற்கு மா-ஸே-துங் நடவடிக்கை எடுத்துள்ளார். இராணுவத்திலுள்ள இந்தப் "பிற்போக்குவாதிகள்"தான் சீனாவில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்குக் காரணம் என்று மா-ஸே-துங் கருதுகிறார்" எனப் பீகிங் வானொலி அறிவித்துள்ளது.

### கமிட்டி நியமனம்

இராணுவத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் திருத்தி அமைப்பு வேலைகளைக் கவனிப்பதற்காக ஒரு கமிட்டியை மா-ஸே-துங் நியமித்துள்ளார்.

சீனப் பாதுகாப்பு மந்திரி திரு. லின்பியோ தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக்கமிட்டியின் ஆலோசகராக திருமதி மா-ஸே-துங் நியமிக்கப்பட்டுள்ளார்.

### மேயர் சுட்டுக்கொலை?

பீகிங்கிலுள்ள சில வெளிநாட்டு நிருபர்கள் அனுப்பியுள்ள செய்திகளில் பீகிங்கிலும் வேறு சில நகரங்களிலும் நடைபெற்ற கொலைகள் சம்பந்தமாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கன்டோனில் மேயர் பீகிங் செங்காவலர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் பீகிங்கில் இரண்டு சிரேஷ்ட (கம்யூனிஸ்ட் கட்சி) உறுப்பினர்கள் தற்கொலைசெய்து கொண்டதாகவும், முன்னாள் மேயர் ஒருவரும் பீகிங்கில் தற்கொலைசெய்ததாகவும் இந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# யுதாண்ட் தீர்ப்பை ஆஸி. பிரதமர் நிராகரித்தார்

கன்பரா, ஜன. 13

மேற்கு நாடுகளின் நலனுக்கும், பாதுகாப்புக்கும் வியட்னாம் அவசியமானது என்ற கருத்தை ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் அண்மையில் வெளியிட்ட அபிப்பிராயத்தில் ஏற்கவில்லை. யுதாண்டின் சிறந்த அபிப்பிராயத்தை ஆஸ்ரேலிய பிரதமர் ஹரோல்ட் ஹோல்ட் நிராகரித்துள்ளார்.

"யுதாண்டின் தீர்ப்பை அதிகாரத்திலுள்ள பலரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் இவர்களில் எனது அரசாங்கமும் ஒன்று" என்று அவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

"வியட்னாம் முடிவு, தென் கிழக்காசியா, பசிபிக், ஆசியா இப்பகுதிநாடுகளுக்கு முக்கியமானதாக அமையும் எனவே நாம் கருதுகிறோம்.

"இப் பகுதியிலுள்ள மற்ற சுதந்திர நாடுகளும் இதே நம்பிக்கையைக் கொண்டுள்ளன என நாம் நம்புகிறோம்.

"இவற்றில் கொரியா, தாய்லாந்து, வியட்னாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, ஆஸ்ரேலியா ஆகிய நாடுகளைச் சேர்க்கலாம்.

"இந்த நம்பிக்கை ஜப்பான், இந்தியா, இந்தோனேஷியா ஆகியநாடுகளிலும் பரவலாக உள்ளது என்பது எனது சொந்தக் கருத்தாகும்."

இவ்வாறு ஹரோல்ட் ஹோல்ட் மேலும் விவரித்துக் கூறினார்.

(பி.டி.ஐ.)


## பொங்கல் வாழ்த்துக்கள்

எங்கும் மங்கலம் பொங்கும்
தைப்பொங்கல் திருநாளில்

எமது உற்பத்திப் பொருட்களாகிய

★ மில்க் வைற் நீல சோப்
★ மில்க் வைற் வெள்ளைசோப்
★ மில்க் வைற் பார் சோப்

என்பவற்றை பாவிப்பவர்களுக்கும்
மற்றும்
எல்லோருக்கும் எமது உளம்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக

மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.


# இந்திய (லோகசபை / சட்டசபை) தேர்தல்கள் நடைபெறும் திகதிகள்

## தமிழ் நாட்டில் பெப்ரவரி 15-ல்

## முக்கிய தலைவர்கள் தொகுதிகளில் போட்டி

புதுடில்லி, ஜனவரி 13

இந்திய பாராளுமன்ற (லோகசபை) ராஜ சட்டசபைத் தொகுதிகளுக்கான தேர்தல்கள் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஒரு சில ராஜயங்களில் ஒரு நாளிலும் மற்றைய ராஜயங்களில் இரண்டு, மூன்று தினங்களிலும் இத்தேர்தல்கள் கட்டம் கட்டமாக நடைபெறும். தமிழ் நாட்டில் மூன்று கட்டமாகத்தேர்தல்கள் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஜ்யங்களும், தேர்தல்கள் நடைபெறும் திகதிகளும் வருமாறு:

### தமிழ்நாடு:

தமிழ்நாட்டில் பெப்ரவரி 15, 18, 21 ஆகிய மூன்று தினங்களிலும் மூன்றுகட்டமாகத் தேர்தல்கள் நடைபெறும்.

பெப்ரவரி15-ல் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் (விருதுநகர்) தி.மு.க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை (தென் சென்னை), முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் (ஸ்ரீ பெரும் புதூர்), திரு. மு. கருணாநிதி (சைதாப் பேட்டை), திரு. மா. பொ. சிவஞானம் (தியாகராஜ நகர்) ஆகியோருடைய தொகுதிகளில் தேர்தல்கள் நடைபெறும்.

மந்திரிகளான திரு. சி. சுப்பிரமணியம் (கோபி—டில்லி சட்டசபை), திரு. ஓ. வி. அழகேசன் (செங்கல்பட்டு—டில்லி சட்டசபை), திரு. ஜோதி அம்மாள் (சென்னை —எழும்பூர்), திரு. வெங்கட்ராமன் (தஞ்சை—டில்லி சட்டசபை), திரு. ராமையா (திருமயம்) உதவி மந்திரி மரகதம் சந்திரசேகர் (மாயவரம்—டில்லி சட்டசபை) ஆகியோரது தொகுதிகளிலும் பெப்ரவரி 15-ம் திகதி தேர்தல் நடைபெறும். இத்தினத்தில் மொத்தம் 13 பார்லிமென்ட் தொகுதிகளிலும் 78 சட்டசபைத் தொகுதிகளிலும் வாக்கெடுப்பு நடைபெறும்.

மற்றைய ராஜ்யங்களில் தேர்தல்கள் நடைபெறும் திகதிகள் வருமாறு:

அஸாம்: பெப்ரவரி 17, 21
ஆந்திர பிரதேசம் 18, 19
பீஹார்: 15, 17, 19. 21.
குஜராத்: 15, 18, 21.
ஹரியானா: 19
ஜம்மு—காஷ்மீர்: 21.
மத்திய பிரதேசம் 16, 17, 20.
மகாராஷ்டிரா: 16, 18, 21.
மைசூர்: 15, 19.
ஒரிஸா, 21.
பஞ்சாப்: 19.
ஹிமாசலபிரதேசம் 18, 21
டில்லி: 19.
மேற்கு வங்காளம்: 19.
உத்தரப்பிரதேசம்: 15, 19 21.
ராஜஸ்தான்: 15, 19, 21.
திரிபுரா: 18.

### தேர்தல் மனுக்கள்

தேர்தல்களுக்கான மனுக்களை ஜனவரி 18-ம் திகதி தொடக்கம் 20-ம் திகதி வரைக்குள் அபேட்சகர்கள் செய்யலாம்.

ஜனவரி மாதம் 21-ம் திகதி அபேட்சகர்களின் மனுக்கள் பரிசீலனைசெய்யப்படும்.

ஜனவரி மாதம் 23-ம் திகதி அபேட்சகர்கள் தமது மனுக்களை வாபஸ் பெற்றுக்கொள்வதற்கான கடைசித்தினமாகும்.

பொதுத் தேர்தல்கள் இந்தியா முழுவதிலும் அடுத்த மாதம் 15-ம் திகதி தொடக்கம் 21-ம் திகதிவரை நடைபெறும்.

### "ஒத்துழைப்பு அவசியம்"

உடுப்பிட்டி, வெள்ளி

"மாணவர்கள் கல்வியில் சிறந்தவர்களாக இருப்பதற்கு பரீட்சைகளில் தேர்ச்சியடைகின்றார்கள் ஆசிரியர்களுடன் மாணவர்களும் ஒத்துழைக்கவேண்டும்" என்று திரு. வி. கோபாலகிருஷ்ணன் நெல்லியடியில் ஒரு வர்த்தக கல்லூரியின் [illegible] வைபவத்தில் கூறினார்.


எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

எங்களிடம்

○ லீலா & சன்கோல்ட் தேயிலை
○ கோல்ட் ஸ்ரோர்ஸ்
யானைமார்க் ஐஸ்கிறீம், ஐஸ்பழங்கள்
குளிர் பானங்கள், கேக்வகைகள்,
பேக்கன் (BACON)
○ பால் சபையின், பால் வகைகள்
○ பலசரக்கு சாமான்கள்

முதலியன
பெற்றுக்கொள்ளலாம்

ஆ.ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ்

ஆஸ்பத்திரி வீதி, :-: யாழ்ப்பாணம்.
போன்: 308




எல்லோர்க்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

Sonnenschein

நீடித்து உழைப்பது

சொனென்ஷீன்



பற்றறி ஒன்றே

ஜெர்மன் தயாரிப்பு

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

துரை அன் கோ

23/2, ஸ்ரான்லி றோட், -:- யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு (14-1-1967) சனிக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறை யாதலால் (15-1-1967) ஞாயிற்றுக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

பல வருடங்களாக நான் கோழையாக இருந்தேன். அப்போது ஹிம்ஸையைக் கைக்கொண்டேன். எனது கோழைத்தனத்தை உதறிவிட்ட மாத்திரத்தில் நான் அஹிம்சையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினேன். —மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Pox 49 JAFFNA
Telegram EELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு தை மீ 1 உ (14-1-67)


## தைபிறக்கிறது வழி பிறக்கட்டும்

இன்று தைப்பொங்கல் தைத்திங்கள் முதல்நாள். தமிழர் திருநாள். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் பெருநாள். இன்று ஒரு நாள் மட்டும் இல்லங்களில் பால் பொங்கினால் போதாது. எல்லா வீடுகளிலும் எல்லா நாளும் பாலும் சோறும் பொங்கவேண்டும்; மகிழ்ச்சி பொங்கவேண்டும்; அன்பு பொங்கவேண்டும்; இதன் பயனாக நாட்டில் செல்வம் பொங்கவேண்டும்; கல்வி பொங்கவேண்டும்; அமைதி பொங்க வேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் இம்முறை பொங்கல் விழா மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தமிழர் மட்டுமல்ல அனைவருமே கொண்டாடவேண்டிய பெரு விழாவாக இன்று இது அமைந்துள்ளது.

பொங்கல் புதுநாள் பழையன கழிந்து புதியன புகுந்த நாள். புத்தாண்டின் புதுமலர்ச்சியும் பாடுபட்டதன் பலனைக் கைமேல் கண்ட புதுத் தெம்பும் எங்கும் நிறைந்து பொங்கும் இனிய நாள். தன் உழைப்பின் பலனைக்கண்டு மகிழ்ச்சியில் திளைக்கும் உழவன், தன் உழவுத்தொழிலுக்கு துணையாக நின்ற சூரியனுக்கும் தன்னோடு இரவென்றும் பகலென்றும், மழையென்றும் வெய்யிலென்றும் பாராது உழைத்த கால்நடைகளுக்கும் சேர்த்துப் பண்டிகை கொண்டாடி நன்றிசெலுத்தும் நன்னாள் பொங்கல் புதுநாள் நம் நாட்டைப் பொறுத்தவரையில் இதுவரை வெளிநாட்டு விவசாயிகளுக்கும் வெளிநாட்டுக் கப்பல்களுக்குமே நன்றி செலுத்தும் திருநாளைக் கொண்டாடவேண்டிய நிலையிலிருந்தோம்; இன்றும் இருக்கிறோம். இனியும் இதே நிலை நீடிக்க முடியாது. பங்கீட்டரிசியின் அளவு பாதியாகக் குறைந்தது இதற்குச் சான்று. நமது உழவர்களுக்கு நன்றிசெலுத்தவேண்டும் உழவுக்கும் தொழிலுக்கும் நாம் வந்தனை செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துகொள்ளவும்வேண்டும் அரசாங்கம் இதை உணர்ந்துகொண்டு விட்டது மக்கள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இலங்கை வாழ் தமிழரைப் பொறுத்தவரையில் சென்ற சில வருடங்களாகத் தைத்திங்கள் முதல் நாள் ஒவ்வொன்றையும் 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்ற நம்பிக்கையுடன் தான் வரவேற்று வந்திருக்கிறார்கள். உழவை மறந்தனர். தொழிலை வெறுத்தனர். உத்தியோகமே பெரிதென மதித்தனர். அதன் விளைவாக உரிமைகளை இழந்தனர். இழந்த உரிமைகள் கிடைக்கமாட்டாவோ என எண்ணி ஏங்கியபடி தை பிறந்தால் வழி பிறக்குமென எதிர்பார்த்து வந்தனர். உழவும் தொழிலும் தான் உரிமைகளைத் தருமென்பதை, கடந்த வருடங்களைவிட இந்த வருடம் தமிழர்களுக்கு நல்ல முறையில் உணர்த்தியிருக்கிறது.

பொங்கல் விழாவின் மற்றுமொரு முக்கிய அம்சம் ஒற்றுமை. உழவன் தன் மனைவி மக்களோடு பொங்கல் புதுச்சோறு படைத்துக் கதிரவனை வழிபடுகிறான் அவன் தான் மட்டும் தனியாக வழிபடாமல் குடும்பத்தோடு சேர்ந்து கொண்டாடுகிறான். ஒற்றுமையான உழைப்பின் பயனை அவன் அறிந்தவன் இலங்கை வாழ் தமிழர் உரிமைகளை இழந்து அல்லலுறுவதற்கும் இழந்த உரிமைகளைப் பெறமுடியாமலிருப்பதற்கும் அவர்கள் மத்தியில் ஒற்றுமை யில்லாதிருப்பது ஒரு காரணம். தைத்திருநாள் உணர்த்தும் ஒற்றுமையைத் தமிழர் இனியாவது உணர்ந்துகொண்டால் அவர்கள் வாழ்வு சுபிட்சமடைய வழிபிறக்குமென்பது உறுதி. தமிழர் தமக்குள் மட்டுமல்ல இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஒரே வழி ஒன்றுபட்ட உழைப்புத்தான் என்பதையும்; ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற பேதம் நீங்கி எல்லோரும் சமத்துவம் என்ற உண்மையான சமதர்மத்தைக் குறிக்கும் பொங்கல் விழாவை இதர சமூகத்தவருக்கும் எடுத்துக்காட்டி, உணவு உற்பத்தியைப் பெருக்க இதர சமூகத்தவர்களுடனும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். காடாகக்கிடக்கும் நிலங்கள் அனைத்தையும் கழனிகளாக்க முன்வரவேண்டும். 'ஜனநாயக சோஷலிஸம்' என்பது வெறும் பேச்சல்ல. செயலில் வர வேண்டும். அதுவே பொங்கல் பண்டிகையின் விளக்கம் என்பதை எடுத்துக்காட்டுவதற்கும் இதுவே தகுந்த சந்தர்ப்பம்.

உணவுக்கு அடுத்ததாக மனிதனுக்கு வேண்டியது உடை. இதற்கும் நாம் வெளிநாடுகளையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இங்கு நெசவு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுவரினும் நெசவு நூலுக்கு இன்னும் வெளிநாடுகளையே நம்பியிருக்கிறோம். பருத்தி உற்பத்தியும் நூல் உற்பத்தியும் இங்கு அதிகரிக்கவேண்டும். கைத்தறியில் நவீன முறைகள் காணப்பட்டு ஆடை உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும். இதனால் நமது தேவைகள் நிறைவேறுவது மட்டுமன்றி, வேலையில்லாத் திண்டாட்டமும் பெருமளவில் நீங்கும் இந்தியாவில் ஒன்றரைக்கோடி மக்களுக்கும் அதிகமானோருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளித்து வருகிறது. கைத்தறி. இந்தியாவின் கைராட்டைத்தொழில்களினால் இருபத்தியேழு லட்சம் மக்களுக்கே வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது.

உழவும் தொழிலும் தான் நமக்கு வாழ்வளிக்கும். இன்று பிறக்கும் தை இதையே உணர்த்துகிறது. உணவு உற்பத்தியிலும்கைத் தொழிலிலும் ஈடுபட இன்று சங்கற்பம் பூணவேண்டும். தைபிறந்தவுடன் வழி பிறந்து விடாது. நமது உழைப்புத்தான் வழி காட்ட முடியும்.

# பொங்கல் விழா ஒன்றல்ல நான்கு

— ஆ. தேவராசன் —

போகிப்பொங்கல், தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், பூப்பொங்கல் என பொங்கல் விழாக்கள் நாலுவகைப்படும். நான்கு பொங்கல்களும் எதற்கு? இதற்கு இங்கு விளக்கம் தருகிறார் இக்கட்டுரை ஆசிரியர்.

தமிழ் மக்களுடைய வாழ்வு என்றும் விழாக்கள் குன்றுமல் பொலிவொடு திகழ்வது! மேழிச் செல்வம் காத்த உழவர்களும், பல்தொழில் புரிந்த தொழில் திறன்னவர்களும் பொருளீட்டிப் பெருவாழ்வு கண்டார்கள். நாடு செழித்திருந்தது - நல்லாறு நிரம்பப் பட்டது.

### விழாமலிந்த வாழ்வு

தமிழ்மக்களுடைய களுவூலங்களான சங்க இலக்கியங்களைத் துருவிப் பார்த்தால் இந்தப் பேருண்மைகள் தெரியும். "விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்" "அழியாவிழவின் அஞ்சுவரு மூதூர்", "விழவு அறுபு அறியா முழவு இமிழ் மூதூர்" என்று பலவாறு காணக்கிடக்கின்றன சான்றுகள். "இந்திரவிழா காமன்விழா" ("காமவேள் விழா")(கார்த்திகைப்)'பெருவிழா விளக்கம்' என்று பல சிறப்புவிழாக்களும் கொண்டாடப்பட்டன.

### கோள்நிலையும் பொங்கலும்

தமிழர்களுடைய விழாக்கள் எல்லாம் ஓரளவு கோள்நிலை மாற்றங்களுடனும் தொடர்புடையனவாய்க் காட்சியளிக்கின்றன. இந்த வகையில் தைத்திருநாளும் ஏற்பு அமைகின்றது. வான்வெளிக் கோள்நிலை அறிஞர்கள் கருத்துப்படியும், கார், கதிர் தந்தவடக இராசியை விட்டு, இளவேனில் தரும் மகரராசியை நோக்கிச் சூரியன் திரும்பும் காலத்தைத் தைத்திருநாள் உணர்த்துகின்றது மழையும் இருளும் நீங்கி வசந்தமும் ஒளியும் சேர்க்கும் நன்னாள் இப்பொன்னாள். நீர்வளமுதலாகச் சகல வசியும் வளனும் பெருக இன்றியமையாதது ஞாயிறு என்பது நிருவப்பெற்ற அறிவியற் கருத்து. இவற்றை உள்ளியோ என்னவோ அன்று இருமுகம் மலர்ந்தருளும் ஞாயிற்று நன்றிக் கடன் செலுத்துமுகமாக ஞாயிற்றுக்குப் பொங்கிப் படைக்கின்றார்கள் "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்று சிலப்பதிகாரமும் ஞாயிற்றை வழுத்தும் மரபு அன்றிருந்ததைக்காண முடிகிறது.

### நான்கு விழாக்கள்

பொங்கல்விழா தைமாசத்தில் நடக்கும் விழாக்களில் ஒன்று. பொங்கலோடு நான்கு விழாக்கள் அடுத்து நடக்கின்றன. மார்கழித் திங்களின் இறுதி நாளன்று 'போகிப்பொங்கல்' அல்லது "இந்திரவிழா" நடக்கிறது. தை முதல்நாளன்று பொங்கல்விழா நடைபெறுகிறது. மூன்றாம்நாள் மேழிச் செல்வத்தின் தோழமைச் செல்வர்களான காளைகளுக்கு மாட்டுப்பொங்கல் நடைபெறுகிறது. அதற்கு அடுத்தநாள் விழாக்களுக்கும் வைபவங்களுக்கும் வாழ்வுக்கும் உயிரூட்டும்பெண்களின் 'பூப்பொங்கல்' நடைபெறுகின்றது

### போகிப்பொங்கல்-இந்திர விழா

மார்கழித்திங்களின் இறுதி நாள், தைத்திங்களின் முதல் நாள் போகிப் பண்டிகை-போகிப்பொங்கல். இந்திரவிழா கொண்டாடப்படுகிறது. இந்திரவிழா எக்காலத்தில் கொண்டாடப்பட்டது என்பது திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. வேனிற்காலவிழா என்று பொதுப்படையாகச் சொல்லலாம். ஏனெனில் இளவேனிற்காலத்தின் முன்னோடியான தையிலும். முதுவேனிற் காலத்தின் முன்னோடியான சித்திரையிலும் இந்த விழாக்கொண்டாடப்படுகின்றது. இந்திரவிழா விளக்கமாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றது. ஊரின் மூலைமுடக்குகள் எல்லாம் விழாமயமாக இருக்கின்றது. மக்கள்உள்ளம் களிப்பால் துள்ளிக்குதிக்கின்றது. இதை இளங்கோ அடிகள்—

"முழவுக் கண் துயிலாது
முடுக்கரும் வீதியும்
விழவுக்களி சிறந்த
வியனுள் ஆங்கண்."

என்று கூறுகின்றார். கோலங்களின் வழிபாடும் அதைத் தொடர்ந்து களியாட்டமும் நடைபெறுகிறது. வழிபாடு தொடங்குமுன் இந்திரனைச் சிலை செய்து நீராட்டி விழா முகிழ்க்கிறது.

"புண்ணிய நன்னீர்
பொற்குடத் தேந்தி
மண்ணகம் மருள
வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை
விழுநீராட்டி"

இந்திரவிழாத் தொடங்குகின்றது.

வழிபாடும் நீராட்டும் முடிந்ததும் களியாட்டுத் தொடங்குகின்றது. பாழ்பேர், இசைப்போர், பல்வேறு விளையாட்டுக்கள் எல்லாம் இடம்பெறுகின்றன. ஆடல் பாடலும் சிறப்பாக இடம்பெறுகின்றன.

"நிலையும் படிதமும்
நீங்கா மரபின்
பதினோ ராடலும்
பாட்டின் பகுதியும்
விதிமாண் கொள்கையின்
விளங்கக்கா ணாய்."

என்று ஆடல்பாடலின் சிறப்பை இளங்கோ அடிகள் சுட்டிக் காட்டுகின்றார்.

### தைப்பொங்கல்

இரண்டாம்நாள் விழாவே பொங்கல்விழா - உழவர் திருநாள். கார்க்காலம் முடிந்து இளவேனில் தொடங்கும்காலம்தான் தைத்திங்கள். மார்கழியில் மலிந்த இருளும், குளிரும் நடமாட்டமற்ற வாழ்வும் ஒழிந்து, மாரியில் விளைந்த புதுச்செந்நெல் அரிசியில் புதுப்பொங்கல் வைத்து, புதுவாழ்வு தொடங்கும் நாள் பொங்கல் திருநாள்: புதுப்பொங்கலுக்கு வழி காட்டும் உழவரைச் சிறப்பித்துக் கூறுகின்றன இலக்கியங்கள். 'செஞ்சொல் உழவர்'' என்று பெரும்பாணாற்றுப்படை சிறப்பிக்கின்றது:

(5-ம் பக்கம் பார்க்க)

# எம். ஜி. ஆர்.

நல்லதுக்கோ கெட்டதுக்கோ புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், நம் இளைஞர்கள் மனதில் தெய்வத்துக்கு அடுத்ததாகக் குடிபுகுந்து விட்டார். அவருக்கு ஒன்று நேர்ந்தால் இவர்களுக்கு ஒன்பது நேரும்.

எம். ஜி. ஆருக்கும் எம். ஆர். ராதாவுக்கும் 'லடாய்' ஏற்பட்டு, ராதா மற்றவரைச் சுட்டுக் கொண்டு தன்னையும் சுட்டுப் போட்டார் என்ற செய்தியை நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் படித்த நமது 'விசிறி' பட்டாளம் "எம். ஜி. ஆருக்கு என்ன நேர்ந்தது? அவருடைய உயிருக்கு ஆபத்தா? ராதாவின் கதி யென்ன?" என்று டெலிபோனிலும், நேரடியாகவும் எம்மை முற்றுகை போட்டு விட்டார்கள்.

'ஈழநாடு'க்கு ஏற்பட்ட பெரிய சிரமம், கடைகளில் ஏழுமணிக்குப் பின் ஒரு பிரதியாவது கிடைக்கவில்லை. 'ஈழநாடு' பத்திரிகையை இரவல் வாங்கக் காதலர்கள் கூட நேற்று எமது காரியாலயத்துக்கு 'டெலிபோன்' பண்ணி 'தயவு செய்து' ஒரு பிரதியாவது கொடுங்கள் என்று கெஞ்சி மன்றாடினார்கள்.

எம். ஜி. ஆரும், எம். ஆர். ராதாவும் எவ்வளவு தூரம் மக்களுடைய மனதைக் கொள்ளை கொண்டுவிட்டார்கள் என்பதை இச்சம்பவங்கள் சித்தரிக்கின்றன.

இருவரும் எல்லாம் மிகவும் அன்னியோன்யமான தோழர்களாயிருந்த இவ்விரு நட்சத்திரங்களுக்குமிடையே என்ன மனக்கசப்பு ஏற்பட்டதென்று எமக்கு இன்னும் தெரியவில்லை. ஏதோ சினிமாப் படம் சம்பந்தமாகத்தான் வேற்றுமை ஏற்பட்டதென்று செய்தி கூறுகிறது.

இது எவ்வளவு தூரம் என்பது இனிமேல்தான் தெரியவரும். இந்தியாவில் இப்பொழுது தேர்தல்காய்ச்சல் வெகு தீவிரமாக அடிக்கிறது. எமக்குத் தெரிந்தவரை எம். ஆர். ராதா, பழம்பெரும் தலைவர் ஈ. வே. ராமசாமி பெரியாரின் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர். எம். ஜி. ஆரோ அதி விருந்து பிரிந்த 'அண்ணா' துரையின் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்.

### நாட்டிலும் நகரிலும்

இவ்விரு கட்சிகளுக்குமிடையே துப்பாக்கிக் குண்டு பரிமாறிக் கொள்ளும் அளவுக்குப் பகைமை கிடையாது. அப்படியிருக்க இந்தத் தோழர்கள் இருவரும் மோதிக் கொள்ளக் கூடிய சூழ்நிலையில் என்ன நேர்ந்ததென்பது ஆச்சரியமாயிருக்கிறது.

கலைஞர்களுக்கிடையே

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கையர் மகிழ்வுறவந்ததே பொங்கல்

—புலவர் க. பூரணம பி. ஒ, எல்—

அன்று மாட்டுப் பொங்கல். நன்றாக மாலைவேளை அண்ணமைப் பல்கலைக்கழக மகளிர் விடுதி முன்னும் மாடியிலிருந்து மாதர் சஞ்சிகை ஒன்றை நாலைந்து தோழிகள் சேர்ந்து பார்த்துக் கொண்டிருந்தோம். நமது விடுதிப் பின்புறத்தில் அமைந்திருப்பது ஏழை மக்களின் குடிசைகளாகும். கலை ஏட்டைப் பார்த்துக் கொண்டிருந்த நம்மைக் காற்றோடு கலந்து வந்த கீதம் திரும்பிப் பார்க்கச் செய்தது. எல்லோரும் எழுந்து நின்று பார்த்தோம்.

சுமார் முப்பது பெண்கள் வரை அரசமர நிழலில் கீழ் வட்டமாக நின்றனர். இரண்டு அணுக் கதம்பங்கள் தலைகளை அலங்கரித்தன. நெற்றியில் அழகான பொட்டு, கைநிறைய வளையல்கள் அணிந்திருந்தனர். அப்பெண்கள் எல்லோரும் நாடோடிப் பாடல்களை இசையுடன் பாடிப் பாடிக் கும்மியடித்தனர்.

அப்பொழுது எங்களுடன் கற்கும் தமிழகச் சகோதரிகளை இவர்கள் ஏன் மகிழ்ச்சியுடன் ஆடிப் பாடிக்கொண்டிருக்கிருர்கள் என்று வினவினேன். போகி நாகலிங்கத்திற்குத் தங்களைப் பலியிடாத தமிழக கிராமங்களில் வாழும் உழைப்பாளி மக்களுக்கு பொங்கல் திருநாள் மகிழ்ச்சி தரும் நன்னாளாகும். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த அவர்களது உழைப்பே செந்நெல்லும் செங்கரும்புமாக மாறிநம்மையெல்லாம் வாழ்விக்கிறது. உலகத்தாருக்கு ஆணியாகத் திகழும் அவர்களது உள்ளம் உழைப்பின் பலிதத்தைக் கண்டு உவகை பொங்க பாடி மகிழ்கிறது என்று கூறினர்.

மேலும் அடுத்த ஆண்டு மாட்டுப் பொங்கலன்று தஞ்சாவூர் விவசாயிகள் தங்கள் உழவுத் தொழிலுக்கு உதவிய மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் காட்சியை நேர்முகமாகக் காணவரும்படி தஞ்சாவூர்த்தோழி ஒருவர் அழைத்தார். அவருடைய அழைப்பை ஏற்று மாட்டுப் பொங்கலன்று தஞ்சாவூருக்குச் சென்றோம். காளைகளை, கொம்புகள் சீவி வெள்ளாற்றில் குளிப்பாட்டி மஞ்சள் குங்குமம் பூசி அலங்கரித்து அவ்விவசாயிகள் வரிசையாக கொண்டு வந்த காட்சியே ஒரு தனி அழகாகும். பண்டைமறத் தமிழர் தங்கள் புதல்விகளைச் சிறந்த உழைப்பாளிக்கு மறம்மிக்க வீரருக்கே மணந்துகொடுக்க விழைந்தனர். அதற்காக ஏறுதழுவுதல், மஞ்சுவிரட்டுதல் போன்ற விழாக்களை வைத்து நன்றி வீரம், காதலொன்றாக இணைந்த பொங்கலைப் பெருவிழாவாகக் கொண்டாடினர். அவ்விழாவின் சாயலே இன்னும் தாஞ்சாவூர் சேலம் ஆகிய ஊர்களில் மாட்டுப் பொங்கலென்று நடைபெறும் மஞ்சு விரட்டுதல் ஆகும்.

இன்று இவர்கள் கொண்டாடும் விழாவில் வீரமும் காதலும் மெல்ல மறைய நன்றி உணர்வுமட்டும்தான் பிரதிபலிக்கிறது.

பல நூற்றாண்டு காலமாக தமிழ்மக்களின் பெருவிழாவாகப் பொங்கல்திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது. செய்நன்றி மறவாத் தமிழன் போகிப்பண்டிகையன்றே தீயனகளைந்து நல்லனவற்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கிறான். தான் அனுபவிக்கும் நலன்களுக்குக் காரணமாகவிருந்த கதிரவனுக்கும் மாடுகளுக்கும் நன்றியைப் பொங்கல் மூலம் தெரிவிக்கின்றான்.

ஈழத்திருநாட்டில் இன்றைய பொங்கல்விழா விவசாயமக்களின் பெருவிழாவாக மட்டும் திகழவில்லை. இளைஞர், முதியோர், பாட்டாளி வணக்காரர், பாமரன் பண்டிதர் அனைவரும் விவசாயத்தில் ஈடுபட ஊக்கப்படுத்தும் உயர்நாளாகவும் மலர்கிறது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவுநெருக்கடியை போக்கடிக்க பொதுமக்கள் திடசங்கற்பம் செய்கின்றனர். இவர்களது ஊக்கத்தாலும் ஆக்கத்தாலும் பசியும் பிணியும்நீங்கி, நாட்டில் வசியும் வளனும் சுரக்கப்போகிறது. 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்ற ஆன்றோர் மொழியை இன்றே நம் முயற்சியால் மெய்மையாக்க நம் மக்கள் புறப்பட்டுவிட்டனர்.

## எம்-ஜி-ஆர் ;. ,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டி பொருமைகள் இருக்கலாம். அவற்றை வெளிக்காட்டாமல் கண்ணியமாக நடந்து கொள்கிருர்கள் பல கலைஞர்கள். சிவாஜி கணேசனுக்கும் எம். ஜி. ஆருக்கும் தமிழ் சினிமா உலகத்தில் பார் சிறந்த கதாநாயகன் என்ற போட்டியிருக்கிறது. இப்போட்டியை ஏற்படுத்தியவர்கள் அவர்களுடைய 'விசிறி'ப் பட்டாளமேயன்றி அவர்களல்ல. இருந்தும் அவர்கள் இருவரும் மிகவும் சௌஜன்யமாக வாழ்ந்து வருகிருர்கள்.

திரையுலகில் ஆதிபீடமாகிய ஹொலிவூட்டில் நூற்றுக்கணக்கான சினிமா நடிகர்கள் இருக்கிருர்கள். இவர்களில் பலர் உலகப் புகழ்பெற்ற நட்சத்திர நடிகர்கள். சார்லி சாப்ளின், மார்லன்பிருண்டோ, பீச்சர் பெக்டன் என்று பல பெரும் புலிகள் இருக்கிருர்கள். இவர்கள் எல்லோரும் கூடிப்போனில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக நாம் கேள்விப்படவில்லை. அவர்கள் அரசியலில் ஈடுபட்டதாகவும் கேட்கவில்லை.

தமிழ்நாட்டு நடிக நடிகையர்கள் அரசியலில் பிரவேசித்து வெவ்வேறு கட்சிகளில் சேர்ந்து போட்டி போடுவதால், சினிமாவுக்கு நஷ்டமோ, அரசியலுக்கு நஷ்டமோ நாம் அறியமாட்டோம். கலைஞர்கள் பொதுவாகத்தமதுகலையை வளர்ப்பதிலேயே முழுமூச்சாக ஈடுபட வேண்டுமென்பதே எமது கருத்து. அரசியலில் பிரவேசித்தால் இரண்டு தோணியில் கால் வைத்தவன் போலாகிவிடும்.

எம். ஜி. ஆர்., எம். ஆர். ராதா இருவருமே சிறந்த நடிகர்கள். தமிழ்த் திரை உலகை அலங்கரிக்கும் முத்தாரங்கள். இவர்கள் மேன் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து கலையுலகுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று திரைப்பட ரசிகர்கள் அவர்களை வாழ்த்துகிருர்கள்.

--வழிப்போக்கன்

## சித்திபெற்றனர்

மானிப்பாய், வெல்வி

இலங்கைப் பல்கலைக் கழகத்தால் நடாத்தப்பட்ட பீ. எஸ், ஸி. பரீட்சையில் 5 வெளிவாரி மாணவரே சித்தியடைந்துள்ளனர். அவர்களுள் செல்வி எஸ். இராமநாதன், செல்வி எம். சபாரத்தினம், திரு எம். ஏ. எம். சலீம் ஆகியோர் யாழ்ப்பாணம் கல்லூரிப் பட்டதாரி மாணவர் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொங்கல் விழா . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஒடுசால் - சாறுகொள் ஓதத்து
இசையொடு மாறு உற்று உழவின் ஓதை பயின்று,
அறிவு இழந்து திரிதரும், ஆர்ந்து நடுநரும், சண்டி
திரு நயத்தக்க வயல்".

என்று விழவுக் களிகொண்ட உழவர் நிலையைப் பரிபாடல் எடுத்துக்காட்டுகின்றது. பொங்கல் திருநாளில் புதுப் பொங்கல் பொங்கி, சுற்றம் சூழ உண்டு மகிழ்ந்தனர். அன்று ஆடல் பாடலும் நிகழ்ந்தன. உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்புக் கொடுக்கும் தமிழர் பண்பாட்டோடு இயைந்த இந்த விழா உலகில் ஒரு தனிவிழா.

### மாட்டுப்பொங்கல் — மஞ்சி விரட்டு

மூன்றும்நாள் மாட்டுப் பொங்கல் விழாவாகும். "நெல்வயலில் உழுதவரும் மாடு- இவை ஆதரிக்க வேண்டுமடி பாப்பா" என்று பாரதியார், மாடு உழவர்- மனிதர் - உயிர்த்தோழன் என்று பாடுகின்ருர். அந்த ஆதரவைக் காட்டும் நன்னாள் - மாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நன்னாள் இந்த மூன்றும்நாள் விழா. மாட்டுப் பொங்கல்விழா, பண்டைக்காலத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. அன்று காளைகளுடன் இளைஞர்கள் மோதி வெற்றியீட்டினர். அந்தக் காளைகளை வளர்த்த இளங் கன்னியர் வெற்றிகொள்ளும் இளைஞர்க்கே சொந்த மாவுரர்கள் இந்த இளைஞர்களை 'ஏறு எதிகளமர்' என்று இலக்கியங்கள் பாராட்டுகின்றன. இந்தக் காளைப் போர்க்காட்சிகளைக் கலித்தொகை முன்று இடங்களில் மிக அழகாகக் காட்டுகின்றது. ஒரு பாடலில் அந்தப் போர், மாறுபட்ட இரு அரசர்களுக்கிடையில் நடக்கும் போர்போல இருந்ததென்று வர்ணிக்கப்பட்டுள்ளது.

"ஆங்கு, ஏறும் பொது
வரும் மாறுற்று மாறு
இருபெரு வேந்தரும் இக
விற் கண்ணுற்ற
பொருகளம் போலும்
தொழூஉ"

என்பது அந்த அடிகள். பண்டைக்காலத்தில் 'ஏறு தழுவல்' என்றழைக்கப்பட்ட இந்தக் காளைப்போர் இன்று 'மஞ்சி விரட்டு' என்று அழைக்கப்படுகிறது. இது மிகவும் களிப்போடு கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு ஊர் மக்களும் முழுமையுடன்கண்டுகளித்தனர்.

### பூப் பொங்கல்

நான்காம் நாள் நடப்பது தான் பூப்பொங்கல் விழா. பூப்பொங்கல் சிறப்பாகப் பெண்களுக்கே உரியது. எந்த விழாவிலும் வாழ்வுக்கு உயிரூட்டி உற்சாகமளிக்கும் பெண்கள் இடம் பெறுவர். இந்தப் பூப் பொங்கலில் அவர்கள் தனியிடம் பெறுவர்.

தைத் திங்களில் ஊனான் கொடி மிகவும் அடர்த்தியாகவும் நீண்டும் வளர்ந்திருக்கும். இது கரும்பச்சைப்புதராகக் காட்சிதரும். வெண்சிவப்பான பூக்கொத்துக்களைக் கொள்ளைகொள்ளும் காட்சியாகத் தாங்கி எழிலாடும். இந்தப் பூக்களைக் கடைகளிலே ஏராளமாக தைப்பொங்கலன்றே வைத்துவிடுவார்கள் சிறுமியரும், கன்னியரும்.

பூப்பொங்கலன்று ஆண்கள் மாலைக்கோயிலுக்குப் போய்விடுவார்கள். மாலைக் கோயில் கிக்கலைடிவிலுள்ள சிவன்கோயில். 'அண்டை' என்று கூறப்படும் மூங்கிற் குழாயிலே பால் கொண்டு சென்று அபிடேகம்செய்து வணங்குவார்கள்.

ஆண்கள் சென்றபின்பு பெண்கள் -கன்னியர்-சிறுமியர் எல்லோரும் பிள்ளையார்கோவிலில் கூடிக் கும்மியடிப்பார்கள். பொழுது சாயும் வேளை வந்ததும் ஊர்ப்பெரியவர் ஒருவர் வீட்டுக்கு வந்து அங்கு கும்மியடிப்பார்கள். அத்துடன் பெண்களின் பூப்பொங்கல் முடிவுறும்.

மாலைக்கோயிலில் ஆண்கள் கும்மியடிப்பார்கள். குமரப் பருவத்து இளைஞர்கள் தலையிலே குஞ்சம் விட்ட உருமால் கட்டிக் கையிலே கைக்குட்டை பிடித்து எதிராக நின்று ஒயிலாக ஆடுவது ஒயிற் கும்மி. வள்ளியம்மை ஒயிற் கும்மி மிகவும் பிரசித்தி பெற்றது. நீண்ட கதையாக இல்லாத சிறு பாட்டுக்களைக் கொண்ட பாட்டுக்களை இசைத்துக் கும்மியடிப்பார்கள் ஆண்கள். கும்மி முடிந்ததும் ஆடவர்கள் தத்தம் இல்லம் சேர்ந்து உறைவர். இத்துடன் பொங்கல்விழா முடிவுறும்.

பொங்கல்விழா உழைப்புக்கு மதிப்புகொடுக்கும் தமிழ்ப்பண்பாட்டுப் பெருவிழா. அவற்றின் நாலையும் இயற்கையுடன் இயைந்தவை. ஆண்களும் பெண்களும் களிகொள்ளும் புது வாழ்வுத் திருப்பத் திருநாள் தைத் திருநாள் —தமிழர் திருநாள்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்! போன்: 7067
ஞானம்ஸ் ஸ்ருடியோ
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
★ எமது கிளை ஸ்தாபனத்தின் திறப்பு விழாவை விரைவில் எதிர்பாருங்கள்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் எத்தனையோ; அத்தனையும் சுவைதான்

பொங்கல் பலவிதம். பொங்கல் சோறு பல விதம். அத்தனையும் சுவையாகத்தானிருக்கும். ஆனால் எல்லோருக்கும் எல்லாம் ஒத்துவருமா? அதற்கும் பொங்கல் கூட்டு இருக்கிறது. கட்டுரையாளர் இங்கு விளக்கமாக இதைக் கூறுகிறார். பொங்கலை அதிகம் சாப்பிட்டுவிட்டு வயிற்றுவலி வராமலிருக்க அவர் வழி கூறுகிறார். சுவைத்துப் பாருங்கள்.

— பி. வி. ராமசாமி —

சாதம், சாம்பார், குழம்பு வகைகள், பொங்கல்கள் ஆகியவை பல்வேறு ருசியும் தன்மைகளும் கொண்டன. அவரவர்கள் உடல் நிலைமைக்கும் வயதுக்கும் கால நிலைமைக்கும் உரியபடி இவைகள் நன்மையும் தீமையும் விளைவிக்கக்கூடியன. ஒருவருக்கு நல்லதாக உள்ள ஆகாரம் மற்றொருவருக்குக் கெடுதலாகலாம். ஒரு வடிவத்தில் நல்லதான உணவு மற்றொரு பருவத்தில் சேராமல் போகலாம். எனவே சாதம், பொங்கல் ஆகியவற்றின் தன்மைகள்—பக்குவங்கள் ஆகியவற்றை அறிந்து கொண்டால் அவரவர் உடல் தன்மைக்கும் கால நிலைமைக்கும் ஏற்றபடி பயன்படுத்தி உடல் நலமும் ஊட்டமும் பெறலாம். மாறுன பொங்கல் சாதம் உண்ண வேண்டிய வலுக் கட்டாயமோ ஆசையோ ஏற்பட்டால், அதற்குப் பரிகாரமான துவையல், பச்சடி, குழம்பு ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து உபயோகிப்பதால் உடலுக்குக் கெடுதல் விளையாது.

## சாதாரண சாதம்

பொதுப்படையாகவெல்லா அரிசியின் அதிக சூடான அன்னம் அமிர்தத்தம், அமிலதாகம், மதமதப்பு ஆகியன உண்டாக்கும்.

மிதச் சூடான சாதம்தான் மிகவும் நல்லது.

இது வாதபித்த, கபங்களாலும், பீனிசத்தாலும் விளைகின்ற நோய்களை நீக்கும்—உடலுக்கும் வலிமை தரும்.

## புழுங்கலரிசிச் சாதம்

பொதுவாகப் புழுங்கல் அரிசிச்சாதமே நல்லதென்பர் மருத்துவர்கள். வாத நோய்களும், வன் தடுமல் நோய்களும் ஏற்பட்ட நோயாளிகளுக்கும் குழந்தைகளுக்கும் புழுங்கலரிசிச் சாதமே நல்லது.

ஆயினும் இது உடலுக்கு உறுதி தருவதில்லை என்றும் ஒரு சாரார் கருத்து.

## பச்சரிசிச் சாதம்

பச்சரிசிச் சாதம் உடலுக்கு வலிமை தரும் என்றாலும் வாய்வு அதிகரிக்கும். குடல் மந்தத்தை உண்டாக்கும். என்றாலும் நல்ல தரமான பச்சரிசி, பொதுவாக பித்தத்தை நீக்கும்.

## அரைகுறை வேக்காடு சாதம்

அரைகுறையாக வெந்த சாதத்தை உண்டால், செமிக்காது. மலம், நீர் கழிவதில் தொல்லைதரும். அன்னரசமும் உடலில் பரவாது. பசியும் அடங்காது. வயிற்றுவலி ஏற்படும்.

## குழைந்த அன்னம்

அதிகமாக வெந்தோ, கஞ்சி வடியாதோ, குழைந்துபோன சாதத்தைச் சாப்பிட்டால், வாத, பிரமேகம், இருமல், அக்கினி மந்தம், கலவீனம் ஏற்படும். கறிவகைகளும் ருசி தடுமாறிப் போகும். கருநிறமலனு மளிக்காது.

## நல்ல பக்குவமான சாதம்

நல்லபக்குவத்தில் சமைத்த சாதத்தை, மிகச் சூட்டில் நல்ல கறிவகைகளுடன் உண்டால், வாத, பித்த, கபக் கோளாறுகளால் ஏற்படும் நோய்கள் அணுகா—வயிறு—குடல்ரோகங்களும் ஏற்படா.

## பொங்கல் சோறு

பொதுவாக பச்சரிசிப் பொங்கல் வயிற்று உப்பிசம், கிலாதம், மூலச்சூடு, உண்டாக்கும்.

இதற்கு மாறுக குளிர்ச்சி தரும் கீரை—வாசிப்பருப்பு வகைகளும், இஞ்சி, கொத்துமல்லி, எலுமிச்சை, நெல்லி ஊறுகாயும் உபயோகிக்கலாம்.

ஆனால் நல்ல சம்பா அரிசிப் பொங்கல் 'வீரியச் சத்தை' அதிகரிக்கும்.

## பாலும் சோறும்

பாலும் சோறும் அளவாக சர்க்கரையும் கலந்து உண்டால் பித்த வேகமும். அமிதநீர் வேட்கையும் தணியும். உடல் கொழுமையும் வீரிய வளர்ச்சியும் உண்டாகும். எல்லாப் பருவத்தினருக்கும் எல்லாவகை உடல் தன்மையுடையவர்களுக்கும், வேனிலிலும் இது நல்ல உணவு.

## நெய் கலந்த சாதம்

நெய்யும் சாதமும் உப்பும் கலந்து உண்டால் கண்களுக்கு குளிர்ச்சிதரும். ஜீரண சக்தி அதிகரிக்கும். பித்தக் கோளாறுகள் நீங்கும். இதனுல்தான் சாப்பாட்டின் துவக்கத்தில் நெய்பரிமாறப் படுகிறது.

நெய் சாதத்துடன் மிளகும் கலந்து கொண்டால் கப-இருமல் நோய்கள் நீங்கும். எல்லாருக்கும் நல்லது. குறிப்பாக குழந்தைகளுக்கும் முதியோருக்கும் தகுந்தது.

## எள் எண்ணெய் சாதம்

சாதத்தில் எள் எண்ணெய் சேர்த்து உண்டால் உடலுக்கு, முக்கியமாக மார்புக் கூட்டுக்கு நல்ல வலிவுதரும். சிற்றுகட்டும் உண்டாகும். வாத, கப, பிரமேக நோய்கள் நீங்கும்.

## ஊன் கலந்த உணவு

மாமிசம் கலந்து சமைத்த சாதம் (புலவு பிரியாணி) நல்ல பலம் தரும். ஆனால் அதிக மந்தமும் சூடும் உண்டாகும். ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கு ஆகா.

பச்சைவெங்காயம், இஞ்சி தயிர்ப்பச்சடி உடன் உபயோகிப்பது அவசியம்.

## தயிர் கலந்த சாதம்

சாப்பாட்டின் முடிவுக் கட்டமாக, புளித்த தயிரும் உப்பும் சேர்ந்த சாதம் உண்டால், நெய் பருப்புச் சாதத்துக்குப் பிறகும் தயிர் சாதத்துக்கு முன்னும் உண்டு, தீனிப் பையில் இறங்கியிருக்கும் எல்லா பதார்த்தங்களிலுள்ள, வாத பித்த கப புலன்கள் நீங்கும். உண்ட உணவும் நல்ல முறையில் செறிக்கும்.

## மோர் சாதம்

சாப்பிட்டபின் முடிவுக் கட்டத்தில் மோர் கலந்த சாதம் உண்டால் முன் உண்ட உணவு வகைகள் நல்ல முறையில் ஜீரணமாகும். உணவு மந்தப்பு நீங்கி உரிய காலத்தில் முறைப்படி நல்ல பசியை உண்டாக்கும்.

பித்த ரோகம், நீர் அதிகம் கழித்தல் மூலை மூலம் மாண்டுநோய், அமிததாகம் கழிச்சல், க்ஷயரோகம் ஆகிய நீங்கும். ஆயினும் உடலில் ரணமுள்ளவர்களுக்கு ஆகாது.

## சித்திரான்னங்கள்

**பால் பொங்கல்**

பாலில் அரிசி சமைத்த ருசியுள்ள பால் பொங்கலை சாப்பிட்டால், தனிவாத தோஷமும் இதில் நெய்யும் சர்க்கரையும் சேர்த்தால் சிலேஷ்ம கப அதிகரிப்

(7-ம் பக்கம் பார்க்க)

ஆதரவாளர்களுக்கும் வர்த்தக அன்பர்களுக்கும் எமது உளங்கனிந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

சாமி அன் சன்ஸ்

[எவர்சில்வர் மொத்த சில்லறை வியாபாரிகள்]

(உரிமையாளர்: சி. கந்தசாமி)

163, கே. கே. எஸ். ரோடு, — யாழ்ப்பாணம்.

வாடிக்கைக்காரர்களுக்கும், அன்பர்களுக்கும் எமது உளங்கனிந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

V. K. இராசரத்தினம்

[ரேடியோ விற்பனையாளர்களும் திருத்துபவர்களும]

11/5, கிராண்ட் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் தொழிற்சாலைக்கு

மின் காவு குழாய்,
தண்ணீர்ச் சேவை,
காற்றேட்ட, வடிகால் குழாய்கள்,
ஆவி, ரசாயனப் பொருட் குழாய்கள்,
மழை நீர்க் குழாய்கள்,
கீழ்த் தரைக் குழாய்கள்

ஆகியவற்றுக்கு உறுதியும் நம்பிக்கையும் அதே சமயத்தில் செலவுச் சுருக்கமுமுள்ள எஸ்-லோன் குழாயையும் இணைப்புகளையும் உபயோகித்தீர்களானல் அதிக பணம் மீதமாகும். இவற்றினல் பிற்பாடும் அதிக பணம் மீதமாகும். ஏனென்றல் எஸ்-லோன் கறள், வெப்பம், ரசாயனப் பொருள்கள், ஆகியவற்றின் தாக்கத்தினை எதிர்த்து நிற்கவல்லதென்பதனல், மாற்று குழாய்கள் பொருத்த வேண்டிய தேவை இல்லாமற் போகிறது. எஸ்-லோன் குழாய், தொழில் துறைக் கருமங்களுக்கு மிகவும் உகந்தது.


எஸ்-லோன் குழாய் கீழ்க்காணும் காரியங்களுக்கு உகந்ததென்பதைப் பரிசீலித்தும் பாருங்கள்:

1. மின்காவு வேலை
2. தண்ணீர் விநியோகம்
3. ரசாயனப் பொருள் விநியோகம்
4. அமிலப் பரிசோதனை உபகரண வடிகால்
5. ஆவிகள் வெளியேறும் வடிகால்.

எஸ்-லோனிலும் சிறந்ததொன்றை நீங்கள் குறிப்பிட முடியாது.

எஸ்-லோன்

உற்பத்தியாளர்கள்:
ராஜேந்திரம்ஸ் லிமிடெட்




(S-lon) என்ற அடையாளத்தைக் கவனித்து வாங்குங்கள்

ATNS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் எத்தனையோ;...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
யும் உண்டாகும்.

அடுத்த சாதத்துடன் இதற்குமுதியான தவையல் முதலிய பதார்த்தங்கள் உபயோகித்தால் இந்தக் கெடுதிகள் தணியும்.

பாற்பொங்கல், சுரத்தால் ஏற்பட்ட பித்தத்தை நீக்கும்.

## சர்க்கரைப்பொங்கல்

கொஞ்சம் சுக்கு, ஏலம், நெய்கலந்த சர்க்கரைப் பொங்கல், வாந்திக்குமட்டல், பித்தநோய் நீக்கும். அதிகம் சாப்பிட்டால் வயிற்று மந்தம் உண்டாகும். மாதுளை இஞ்சி சட்னி முதலியன பின்னர் உபயோகிப்பது நல்லது.

## பருப்புப்பொங்கல்

பாசிப்பருப்புப் பொங்கல் விந்துவிருத்திதரும். பித்தக் கோளாறு நீக்கும். ஆனால் அதிகமாகத் தொடர்ந்து உண்டால் வாதக்கோளாறு கண்டிக்கும். வெள்ளைப் பூண்டு, வெங்காயம், இஞ்சி, கறிவேப்பிலை கலந்து சமைப்பது நல்லது.

## மிளகுப்பொங்கல்

மிளகு கலந்த பொங்கல் பொருமுகின்ற வாய்வு தொல்லை, குடலிரைச்சல், கபக்கட்டு, பித்தக்கோளாறு நீக்கும்.

## புளிச்சாதம்

நல்லெண்ணெய் கலந்த புளிச் சாதம் பித்த தோஷங்களை நீக்கும். ஆனால் தொடர்ந்து சாப்பிட்டால் உடல் சூடு அதிகரிக்கும். குட்டிகளுக்கு வயிற்றுவலி, ரத்தக்கடுப்பு உண்டாகலாம். சாப்பிட்டபின்னர் தயிர், மோர் அதிகம் உபயோகித்தால் சூடு தணியும். கடுகு தாளிதம் செய்த புளிச்சாதமும் வாத சுபக் கோளாறுகளை நீக்கும்.

## எள் சாதம்

வறுத்து கழுவித் தேய்த்த - கசப்பில்லாதாக எள் சேர்த்து சமைத்த பொங்கல், வாத - பித்தம் நீக்கும். உடலுக்கு வலிவு தரும். ஆனால் கபம் அதிகரிக்கும்.

## உழுந்தம் பருப்புச்சாதம்

உழுந்தம் பருப்புக் கலந்த பொங்கல் உடலுக்கு நல்ல வலிவுதரும். பித்தக் கோளாறு நீக்கும். ஆனால் தொடர்ந்து சாப்பிட்டால் கபவாத தொல்லை உண்டாகலாம்.

## தயிர்ச் சாதம்

தாளிதங்களுடன் கூடிய தயிர்ச்சாதம் உடல் உஷ்ணத்தையும் பித்த ஆதிக்க நோய்களையும் நீக்கும். உடலுக்கு நல்லது.

## கட்டுச்சோறு

கட்டுச்சோற்றை தினமும் உண்டுவந்தால் உடலில் குதிதல் நோய் காணும். இரைப்பு, இருமல், கண்டமாலை நோய் உண்டாகும். ஆனால் ரத்தப் பிரமேகமும் வெள்ளை நோயும் நீக்கும்.

## பழையசோறு

இரவில் நீருற்றிவைத்த பழஞ்சோற்றை அந்தநீராகாரத்துடன் அதிகாலையில் உண்டால் சக்தி வளர்ச்சியும், ரத்தவெதுவெதுப்பும் உடலுக்கு அழகொளியும் உடல் கட்டும் உண்டாகும். பித்தம் வாதத்தொல்லைகள் நீங்கும்.

மோர் சேர்த்து பழஞ்சோறு உண்டுவந்தால் உடலில் காணும் எரிச்சல், பித்த நோய்கள். மனத்தடுமாற்றம் முதலியவை நீங்கும். ஆனால் உடலில் சீதளமும் அமித தூக்கமும் சோம்பலும் ஏற்படும். கடல் உழைப்பாளிகளுக்கு இது நல்லது.

## புளித்தசோறு

அதிகநேரம் வைத்திருப்பதால் புளித்துப்போன பழைய சாதம் உடலில் அமித சூட்டைக் கிளப்பும். ஆனால் பித்தம் அதிகரிப்பு மந்தத்தினால் வெளுப்பாக மலம் இறங்குதல், சிதக்கட்டு ஆகியவை நீங்கும்.

## கம்பச்சோறு

காட்டுக் கம்புசாதம் பழையது நல்லது; சூடுதணிக்கும். சூடான கம்பச்சோறு ரத்தத்தைக் கண்டவைக்கும், உடலில் சூடு அதிகரித்து இருமல் இரைப்பு ஏற்படும்.

கோடைகாலத்தில் பழஞ்சோறும், நீராகாரமும், கோடைச்சூட்டைத் தணித்து உடலுக்குக் குளிர்ச்சி தரும். வெப்ப நோய்களையும் தணிக்கும்.

## ஊசிய சாதம்

ஊசிப்போன சாதத்தை உண்டால், உடனே பெரும் தூக்கம் உண்டாகும். குமட்டல், வாந்தி, கழிச்சல் உண்டாகலாம். தொடர்ந்து உண்டால் வாத நோய், சீதளநோய், பித்தநோய் ஏற்படும்.

---

## பொங்கல்விழா

கரவெட்டி, சனி

கரவெட்டி கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் பொங்கல்விழா கட்டைவேலி மெதடிஸ்த பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

---

## சைவசமய சமரச சங்கம்

கரவெட்டி, வெள்ளி

வட இலங்கை சைவசமய சமரசசங்க நிர்வாகசபைக் கூட்டம் சைவப்புலவர் இ. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் செயலாளராக இருந்து தொண்டாற்றிய கவிஞர் மு. செல்லையா அகாலமரணம் குறித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

க. முருகேசு, ஆ. கணபதிநாதன் ஆகியோர் இணைச் செயலாளர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். நிதி திரட்டுவதற்கு ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.


NORTHERN INDUSTRIES

ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
பொங்கல் வாழ்த்துக்கள்

சிறந்த முறையிலு
உத்தரவாதத்துடன்
உங்கள் டயர்களைப் புதுப்பிப்பதற்குச்
சிறந்த இடம்

நோர்தேன் இண்டஸ்ரீஸ்

8/1, ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம.
போன்: 7158

எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

பாரத் ஸ்ருடியோ
போன்: 252
கஸ்தூரியார் வீதி, :-: யாழ்ப்பாணம்.

பண்டிகைப் பருவத்தைக் கொண்டாடி மகிழ
ஏற்ற
இசைத்தட்டுகள் இசைக்கருவிகள்
ரேடியோக்கள் அம்பிளி பயர்கள்
மற்றும்
மின்சார சாதனங்களுக்கு
நம்பகமான ஸ்தாபனம்

"HIS MASTER'S VOICE"
The Hallmark of Quality

S. சுலைமான்கண்டு & பிறதர்
மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி, -:-:- யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!
தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களை வாசனையால்
பரிமளிக்கச் செய்யவும்
சண்முகா ஜவ்வாது
பத்திகளை
உபயோகித்து ஆனந்தமடையுங்கள்!
ஆ. இராசையா அன் சன்ஸ்
69, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.

மலிந்த விலையில் சிறந்த பொருட்கள் வேண்டுமா?
இன்றே விஜயம் செய்யுங்கள்
எங்கள் ஸ்தாபனத்துக்கு

அழகு சாதனங்கள், வாழ்த்து அட்டைகள், பரிசுப் பொருள்கள் விளையாட்டுச் சாமான்கள், பவுடர், சோப்பு, ஹெயர் கிறீம்கள், பால், மாவு வகைகள், தோப்பை, பிஸ்கால் வகைகள், பிளாஸ்டிக் சாமான்கள், சூட்கேஸ், டிறங்பெட்டி, பவுண்டன் பேனைகள், கடுதண்ணீர் போத்தல்கள், பழச்சத்துக்களும், பழரசங்கள், உணவுக்குரிய திரவகங்கள், லேபல்கள், வாசனைத் திரவியங்கள் மோட்டோர் கரேஜ் மற்றும் கைத்தொழில்களுக்குரிய தளபாடங்கள் ஆயுதங்கள்

மலிவாகப் பெற்றுக்கொள்ள இன்றே வாருங்கள் எங்கள் புதிய ஸ்தாபனத்துக்கு
ருஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தபால் பெட்டி இல. 64
போன்: 372 தந்தி: ருஜு

ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!
கே. என். எம். மீருன்சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 585

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும
எமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
பெண்கள் விரும்பும் முடியயிர் வகைகளும்
அன்பளிப்புப் பொருட்களும் எம்மிடம்
மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.
எஸ். சவரிமுத்து
73, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தொழிலாளர்களுக்கு கட்டுப்பாடு முக்கியம்,"

## தபால்,தந்தி ஊழியர் ஆண்டுவிழாவில் வடபகுதி தபால்அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், சனி

ஜனநாயகம் என்ற முறையில் செயலாற்ற வேண்டுமானால், தொழிலாளர்களாகிய நீங்கள் கட்டுப்பாட்டிற்கு அமைந்து நடக்கவேண்டியது அவசியம். இலங்கையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருக்கவேண்டும். மற்ற உங்களின் கருத்திற்கு மதிப்புக் கொடுக்க பழகிக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர் கலாமன்றத்தில் நேற்றுக்காலை நடந்த அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் யாழ்ப்பாணக் கிளையின் 17-வது வருடாந்தக் கூட்டத்தில் வடபகுதி தபால் அத்தியட்சகர் திரு. தா. தர்மலிங்கம்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். இளைஞர் சங்க தலைவர் திரு. சி. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. தா. த. தர்மலிங்கம் மேலும் கூறியதாவது அரசாங்கத்தில் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. ஆனால் உங்கள் கோரிக்கைகளையிட்டு, அரசாங்கத்திடம் வாதாடுவேன்.

முதன் முதலாக தொழிற்சங்கம் உருவானது அன்பின் அடிப்படையில்தான் தாம் சமூக பொது சேவையாளர் திரு. ஏ. வில்லியம்ஸிலோ பேசும் போது கூறியதாவது: உங்களின் முற்போக்கை கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்த முற்போக்கு வளரவேண்டும். அங்கத்தவர்கள் மலர் சேமலாப நிதியில் சேர்ந்துள்ளனர். வடபகுதியில் அதிகமான ஊழியர் சேர்ந்துள்ளனர், இதுவரை இளைப்பாறியவர்களுக்கு இருபதினாயிரம் ரூபா வரை கொடுத்துள்ளோம். 3 வருடம்தொடர்ந்த சந்தா கட்டி வருபவர்களுக்கு 250 ரூபா கொடுத்துவருகிறோம்.

இளைப்பாறிய தபால் பகுதி ஊழியர் ஏ. பொன்னுத்துரை என்பவருக்குசேமலாப நிதிப் பணம் வழங்கப்பட்டது. காலி, நுவரெலியா மற்றும் பல இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

# நகரில் கூட்டங்கள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினங்களுக்கு அமுலிலிருக்கும். எம். ஜி. ஆரின் தி. மு. கழகத்தினருக்கும் ராதாவின் திராவிட கழகத்தினருக்குமிடையில் மோதல் ஏற்படக்கூடுமென பொலிசார் அச்சமடைந்து உஷார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான எம். ஜி. ஆர். அடுத்துவரும் பொதுத் தேர்தலில் தமிழ்நாடு சட்டசபைக்கு 'பரங்கிமலைத்' தொகுதியில் திமு க. அபேட்சகராகப் போட்டியிடுகிறார், பெரியார் ஈ. வே. ராவின் திராவிடக்கழகம் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கிறது. ராதா திராவிடக் கழகத்தில் ஒரு முக்கிய பிரமுகராவார்.

### அண்ணா பார்த்தார்

ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலிருந்து சென்னை பெரியாஸ்பத்திரிக்கு நேற்றிரவு எடுத்துச்செல்லப்பட்ட நடிகர் எம் ஜி. ஆரை தி மு க தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை சென்று பார்த்தார்.

# பேசிக்கொண்டிருந்தபோது ராதா சுட்டார்

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் புரட்சி நடிகர் எம் ஜி ராமச்சந்திரனுக்கு நடிகவேள் எம் ஆர் ராதா டெலிபோன் செய்து பேசியதாகவும் எம். ஜி. ஆரைச் சந்தித்துப் பேசவிரும்புவதாகவும் அவரது நந்தம் பாக்கம் சத்தியாதோட்டப் பங்களாவுக்கு வருவதாகவும் தெரிவித்தாராம். பின்னர் 'முத்துக் குமரன் பிக்சர்ஸ்' அதிபர் வாசுவுடன் ராதா எம். ஜி. ஆரின் நந்தம் பாக்கம் பங்களாவுக்குச் சென்று எம். ஜி. ஆருடன் பேசிக்கொண்டிருந்தாராம். இதில் திருவாசகவும் கலந்துகொண்டாராம். ராதாவுக்கும் எம். ஜி ஆருக்குமிடையில் ஒரு படம் சம்பந்தமாகத் தகராறு இருந்துவந்ததாம் நேற்றும் இருவரும் அதுசம்பந்தமாகப் பேசிக்கொண்டிருக்கையில் இருவருக்குமிடையில் கடும்வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் திடீரென்று ராதா கைத்துப்பாக்கியை எடுத்து எம். ஜி. ஆரை நோக்கிச் சுட்டதாகவும் காதில் காயமடைந்த எம். ஜி. ஆர் வெளியே ஓடிவர அறையினுள் ராதா தம்மைத் தாமே இரண்டு தடவைகள் கழுத்திலும் நெற்றியிலும் சுட்டுக்கொண்டு விழுந்ததாகவும் பொலிசாருக்குக் கிடைத்தவர்க்கு மூலங்களிலிருந்து தெரியவருகிறது.

---

அம்பாறைக்கு

### இரு காரியாதிகாரி கந்தோர்

கல்முனை, வியா.

அம்பாறை மாவட்டத்தில் புதிதாக இரண்டு காரியாதிகாரிகள் கந்தோர் திறக்கப்படவிருக்கின்றன.

அம்பாறையில் உகனைப் பகுதி ஒரு காரியாதிகாரி பிரிவாகவும் நிந்தாவூர் இன்னொரு காரியாதிகாரி பிரிவாகவும் அமையும்.

### திருச்செல்வம் ஆட்சேபம்

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் அடுத்தவருடமுற்பகுதியில் அமைக்கப்படவிருக்கும் 'டெலிவிஷனில்' தமிழ் நிகழ்ச்சிகளுக்கும் ஒழுங்கு செய்யப்படவேண்டுமென்றும் சிங்கள ஆங்கில, நிகழ்ச்சிகள் மட்டும் ஒழுங்கு செய்யப்படுவது சரியல்லவென்றும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தகவல் ஒலிபரப்பு அமைச்சரான பிரதமருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

### மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

கரையூர் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த கான்ஸ்டபிள்களைத் தாக்கியதான வழக்கு மீண்டும் இம்மாதம் 20-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கரையூர்ப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்களான புத்திலக, சிமியோன், ஆகிய இருவரையும் தாக்கியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை. அவரது மனைவி றெஜினா, மகன் நெல்சன், மகள் ஜீலியட் ஆகிய நால்வரையும் தலா 100 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். எதிரிகள் சார்பில் புரக்டர்கள் ஏ. அன்ரனி, ஆர். விஸ்வநாதன் ஆகியோர் ஆஜராகியிருந்தார்கள். (ந. நி)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

மாதர்களே!

மாதவிடாய் சம்பந்தமான சகல கோளாறுகளுக்கும், 2 முதல் 3 மாதங்கள் வரை மாதவிடாய் தடைப்பட்டாலும்கூட நிவாரணம்பெற உடனே

மென்சோஸ்டிரோன்

மாத்திரையை உட்கொள்ளுங்கள்

இது ஓர் அசல் இங்கிலிஷ் உற்பத்தி.
எல்லா வியாபாரிகளிடமிருந்தும் கிடைக்கும்.

விலை ரூ. 7-50 தபாற் செலவு ச. 50

வி. பி. பி. கவனிக்கப்படும்.

மெட்ரோ ஏஜென்ஸி,
235 1/1, நொரிஸ் ரோட், — கொழும்பு-11

ஸ்ரேலிங் குஞ்சுகள்
(STERLING CHICKENS)


11-1-67 ஈழநாட்டில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின்படி கிடைக்கப்பெற்ற முழுப் பதிவுகளையும் பூர்த்தி செய்ய முடியாமையால் ஸ்ரேலிங் ஸ்தாபனத்தார் தங்கள் பிரதிநிதியை யாழ்ப்பாணத்தில் 19-1-67 வரை நிறுத்தியுள்ளார்கள்.

ஏற்பட்ட இராக்கி இருந்தமையால் எல்லோருடைய தேவையைப் பூர்த்திசெய்ய முடியாமல் போய்விட்டது. இதற்காக எங்கள் மன்னிப்பைக் கோருகிறோம். அடுத்த வியாழன் (19-1-67) யாழ்ப்பாணத்தில் எங்கள் ஸ்ரேலிங் குஞ்சுகளைப் பெற விரும்புவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் உங்கள் தேவைகளை முற்பணத்துடன் பதிவுசெய்யுங்கள்.

ச. சிவானந்தன்

"இங்கவாசா", — கோப்பாய்.

குஞ்சுகளை
காலை 7 மணி தொடக்கம் மாலை 3 மணிக்குள்
சுபாஸ் விடுதி வீட்டில்
பெற்றுக் கொள்ளுங்கள்.



ஸைவ்போய்
அளிப்பது சுகவாழ்வு

ஆகா! லைவ்போய் ஸ்நானத்தில்தான் எத்துணை ஆனந்தம்! என்னே வலிவும் பொலிவும் மிக்க புத்துணர்ச்சி! லைவ்போய் சோப் உபயோகித்து, உங்கள் ஸ்நானத்தின் பின் புத்துணர்ச்சியும் உற்சாகமும் உடலாரோக்கியமும் பெற்றுத் திகழுங்கள். லைவ்போய் அழுக்கையும் அழுக்கிற் படிந்திருக்கும் கிருமிகளையும் அகற்றுகிறது.........
உங்களைச் சுத்தமாகவும் சுகமாகவும் வைத்திருக்கிறது.

லைவ்போய் முழுக்குடும்பத்திற்கும் உகந்த சோப்

ஒரு லீவர் உற்பத்தி

JWT/L/1x52

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலக்கோல்ஸ் லேன்வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தங்கம், வெள்ளி, குரோமியம்
முதலியவற்றில் முலாம் பூசுதல்
போன்ற சகல வேலைகளுக்கும்
யாழ் மெற்றல்
இன்டஸ்ற்றீசுக்கு
விஜயம் செய்யுங்கள்
உயர்தரமான வேலைப்பாடு
உத்தரவாதம்செய்யப்படும்
250, 252, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி: யாழ் மெற்றல்
டெலிபோன்: 7049



'யாழ் பிராண்ட்'
அலுமினியம், செம்பு, பித்தளை
பாத்திரங்கள்
உற்பத்தி செய்பவர்கள்.
தன்மையும், வேலைத்திறனும்
உறுதிப்படுத்தப்பட்டவை.
யாழ் மெற்றல்
இன்டஸ்ற்றீஸ்
250, 252. கே. கே. எஸ். வீதி,
தந்தி: 7049
டெலிபோன்: 'யாழ் மெற்றல்'


# பொங்கல் திருநாள்

தொழிலுக்கு ஒரு பெருந் திருநாள் — பஞ்சம்
தொலைய உழைத்திடும் தமிழரின் திருநாள்
எழிலுக்கு ஒளி தரும் கதிரோன் — தன்னை
ஏற்றித் தொழுதிடும் இன்ப முதல் நாள்

பண்டைத் தமிழர் கொண்டாட்டம் — இதைப்
பாரம் பரியமாய்க் காத்தல் நம் நாட்டம்
சண்டை, பிரிவினை, தாழ்வு — நீங்கச்
சமத்துவ வாழ்க்கைத் துணிவையும் ஊட்டும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைத் திருநாள்

மாலை ஞாயிறு மரப்பொளிப் பாலினைப் பருக
நீல வான்வெளி நிலமகள் எய்திய நிமிர்வைப்
போலவே புத்தொளி பொங்கிட உயிர்க்குலம்
பொழியும்
சோலயித் தைமகள் கொணர்ந்தநற் சீரதன்
செழிப்பே!

மூடி நின்றகார் முகிற்குலை நைந்தது; முளரி
சூடி நின்றனன் கமங்கலி பாய்ப்புனல்; சுழன்று
பாடின வண்டுகள்; பறந்திசை மிழற்றின
பறவை;
ஆடின தங்கி அருவிகள் தோறுமகிலங்கள்.

வசலை மீனினம் வயலிடைக் குதித்தறு
வடைசெய்
வேலை வந்ததை விளம்பின கிளிகள் விரட்டி!
வாழையும் கன்னலும் வாகுற வளர்ந்தெழில்
வளஞ்சேர்
சூழலைப் புதுக்கின; செழித்தன உழவர்தம்
உளங்கள்.

பச்சை மாமணிப் பரவலாய் மண்டிய பசும்புல்
இச்சை பாய்ப்பசு இனம்சுவைத் திரங்கின
இங்கார்;
மெச்சுதை மங்கையள் மேதினி மீதெலாம்
மிடிமை
நச்சினைத் தீய்த்தலும் நனிசெழித் தனபுது
நலங்கள்.

எங்கு மின்பியல் இயற்கையன் தீட்டலும்
இனிமை
பொங்கி நீள்பெரும் புவியெலாம் பாய்ந்தது;
புதிய
மங்கலத் தைத்திரு மாதினை மணங்கமழ்
மதுரப்
பொங்கலி னுக்கர வேற்றது தமிழ்க்குலம்,
போற்றி!

- எருவல் மூர்த்தி

★

# பொங்கல் தமிழர் பொதுநாள்

பொங்கல் தமிழர்ப் பொதுநாள் — இதைப்
புரிந்தும் உணர்ந்தும் சுயநலம் வெல்வோம்
எங்களுக் கானவை யென்றே — தொழில்
எல்லாம் மதித்தெங்கள் தோள் கொட்டிச்
சொல்வோம்

தொழிலுக்கு ஒரு பெருந் திருநாள் — மஞ்சம்
தொல்லை உழைத்திடும் தமிழரின் திருநாள்
எழிலுக்கு ஒளி தரும் கதிரோன் — தன்னை
ஏற்றித் தொழுதிடும் இன்ப முதல் நாள்.

பண்டைத் தமிழர் கொண்டாட்டம் — இதைப்
பாரம் பரியமாய்க் காத்தல் நம் நாட்டம்
சண்டை, பிரிவினை, தாழ்வு — நீங்கச்
சமத்துவ வாழ்க்கைத் துணிவையும் ஊட்டும்

மண்ணை வளஞ்செய் பணியால் — இந்த
மானிடர் அஞ்சும் பசிப்பிணி நீங்கும்
விண்ணை யாராய்வதால் வையம் — எங்கும்
மேலும் விஞ்ஞானப் புதுமை மேலோங்கும்

உண்மை உறவும் கனிவும் — அன்பு
உறவும் ஒருமைப் பெருமை புணர்வும்
திண்மைச் சுதந்திரத் தெளிவும் — வெற்றித்
திருவும் விளங்கிடத் தூண்டும் ஓர் தன்னாள்.

பொங்கல் அமுதைப் படைப்போம் — அந்தப்
பொதுநாளில் அகம்புற உண்மை படிப்போம்
எங்கும் பலதொழில் எடுப்போம் — காணும்
இயற்கையின் செல்வங்கள் அள்ளிக்
கொடுப்போம்

சோம்பேறிக் கூட்டத்தார் சோர்வார் — பொய்யைச்
சூழ்ச்சிச் சலனங்கள் சுகங்கெட்டு வீழ்வார்
நாம் எல்லாம் ஓரினம் என்றே — இங்கு
நாட்டத் தொழில் வளம் காண்பதும் நன்றே.

வள்ளுவர் காட்டிய வாழ்க்கை — தனி
மனித சுதந்திரம் காத்திடும் வாழ்க்கை
தென்னு தமிழ்க்குடி வாழ்க்கை — பொருள்
தேடிக் களை, தொழில் தேர்ந்திடும் வாழ்க்கை.

இல்லாத ஏழைகள் எனினும் — துயர்
இல்லாமற் செய்திட இயற்றும் தொழில்கள்
நல்லவை ஆயிரம் செய்வோம் — இந்த
நாட்டிலே நமக்கு நாம் நிகர் என உய்வோம்.

பொங்கலப் பகைகளும் விழ — தமிழ்ப்
புலமையால் ஒருமையும் புதுவாழ்வும் சூழ
நல்லோராய் எல்லோரும் வாழ — இந்த
நாட்டிலே பொங்கல்நாள் போற்றுவம் வாரீர்.

—கவிஞர் சக்தி அ. பாலையா.

# பொங்கலே! வாழ்க!!

கார்மூகில் பெய்யக்; கங்கை
கழனிகள் பாய; தூய
ஏரோட்டி பெரிது மோங்க;
இளைஞர்கள் கருமம் ஆற்ற;
வாரணி மாதர் கூடி
வயல்களில் பாடி யாடித்
தாரணி வறுமை போக்கத்
தம்மையாள் வேலை செய்ய!
செந்நெலும் விளைய; தேசச்
செல்வமும் கொழிக்க; நட்ட
கன்னலும் காடு போலக்
கதித்தெழக் கஷ்டம் போக
இன்னலே இல்லை இந்த
இகந்தனில் என்று மக்கள்
நன்னெறி போற்றி வாழ
நானிலம் மோகன மாக;
செங்கதி ரோனை வாழ்த்திச்
செழும்புனல் முகிலை வாழ்த்திப்
பங்கமில் பழத்தின் சாறும்
பாலொடு தேன் கலந்து
எங்குமின் இனிமை சேர
இல்லங்கள் தோறும் இன்று
பொங்குவோம்; புலவர்
போற்றும்
பொங்கலே! வாழ்க!!
வாழ்க!!!

காரை - செ. சுந்தரம்பிள்ளை

# க
# வி
# ஞ
# ர்
# பொ
# ங்
# க
# ல்

# பொங்கல் பொங்குமே!

இயற்கை மிளிர்ந்திடப்
பொங்குக
இயற்றிட நற்கலை
பொங்குக!
உயற்சி வாழ்விலே
பொங்குக
உலகெலாமொளி
பொங்குக!

அயலுடன் அன்பரும்
பொங்கி
ஆண்மையும் வீரமும்
பொங்குக!
பயமுடன் பிணியெலாம்
மறைந்திட,
பானையில் இட்டபால்
பொங்குக!

ஏற்றந்தவோர் வாழ்வு
பொங்குக
எத்தொழிலுஞ் சிறந்
தோங்குக!
பாரெங்கும் பசிவென்ற
மிடிகெட
பண்புற்ற சுகவாழ்வு
பொங்குக!

அரிசியும் பயறும்
வெந்ததன்
அமுதமாம் பொங்கல்
பொங்குமே!
திரிபுகள் சுழிபுகள்
வெந்திடில்
தெய்வீகம் மனதிலே
பொங்குமே!

இயற்கை போடொன்றிய
வாழ்விலே
எம்முன்னோர் கண்டதிப்
பண்டிகை
செய்கையாம் வாழ்விலும்
நீற்பினும்,
[illegible] (கலை)
பொங்குமே!

- நாவலியூர்க் கவிராயர் -

# பொங்கல் காண வாராய்!

மையிருளை ஊடுருவும் வாணம் — அது
மண்ணை நோக்க வந்ததடா நாணம்!
பையவர் வெடி பொங்கலன்று
பார் வெடிக்கும் எங்குமின்று
பிலிப்பு — கொண்ட
களிப்பு
நீள் வழியில் நீர்தெளிந்த ஓடை — குளிர்
நீலநிறந் தாங்கும்பனி வாடை
ஆள் மயக்கும் கன்னி வள்ளி
அங்கு நின்றுள் தண்ணீர் அள்ளி!
வாரும் — வீடு
பாரும்
சாணி மெழுக் கிம்மறைந்து குற்றம் — கோலந்
தாங்கியெழில் பூக்கும் அந்த முற்றம்
பேணி மூன்று கல்லை வைத்தார்!
பின்னர் சுளி கன்குவித்தார்!
வாரும் — வீதி
பாரும்
வாழை பலா மாங்கனி வாங்கி — கூடை
வைத்துத்தலை மேலிருத்தித் தாங்கி
தோளிலொரு பொட்டணமாய்
தொங்கலிலொரு பட்டணமாய்
காத்தச — வரக்
பார்த்தாய்!
முட்டிமோதும் ஆட்டுக்கடா ரண்டே — போல
முற்றிமோதும் நெற்கதிர்கள் கண்டே
வெட்டி அள்ளி நெல் கரும்பு
வீடு செல்வன் ஆள்திரும்பி!
கண்டாய்! — புதிர்
கொண்டான்!
உக்கிளக்கு வைத்தபெரு மேளம் — வானில்
ஓங்கியெழு இன்றகதிர்க் கோலம்!
தன்னுமிரு காளை மேலும்
தூக்குழவன் மேழி கோலம்
கீர்யும் — அதோ
தெரியும்!
காக்வருந்தக் காட்சியல கண்டோம் — அந்தக்
காட்சிகளில் இன்பமயக் குண்டோம்!
பாக்சொரிந்து தேன்சொரிந்த
பைந்தமிழ்ப்பொங் கலருந்த
வாரீர் — உண்டு
மகிழ்வீர்!

— ச. வே. பஞ்சாட்சரம் —

★

# "தை பிறந்தது"

மார்கழியாம் மாதத்தில்
மனைவாசல் முற்றத்தில்
சீராய் எழிற்கோலம்
தீட்டிடுவார் சேயிழையார்
திருவின் பொலிவாலே
திக்குத் திசையனைத்தும்
பெருகும், இனிமையிலே
பீடே குலவுமுளம்
மருவும் துயரழிய
மட்டற்ற செல்வங்கள்
உருவம் பெறுமவற்றின்
உண்மை ஒளியோங்கும்.

கோழி குரல்காட்டி
குளிர் தமிழின் பாவிசைக்க
ஆழிப் படுக்கை நின்று
ஆதவனார் தானெழுந்து
வானில் வருகைதந்தார்;
வாகார் ஒளிகண்டு
தேனூர் தமிழ் பாடிச்
சிறகடித்துப் புள்ளினங்கள்
பாடிற்று இந்நாளை
பைந்தமிழர் முன்னுளிக்
கூடி ஒருமித்து
குறித்தார்கள் தைமுதலாய்

காரின் வரவாலே
காய்ந்த இடம் குளிர
ஈரம் உலருமுன்னர்
ஏரால் உழுதுழவர்
இட்டார் விதைகளினை
எல்லோரும் வாழ்கவெனப்
பட்டார் பலபாடு
பயிரும் வளர்ந்தோங்கி
நெல்லாம் மணியாக
நீளுலகம் வாழ்கவென்றே
நல்ல மனத்துடனே
நல்கும் உழவன்றன்
ஆழ்ந்த அகத்தன்மை
ஆதவனார்க் கீந்து
வாழ்த்த இசைந்தேதை
மாதத்தை பார்த்திருந்தான்

அறமெனும் அடுப்பை மூட்டி
அன்பெனும் கலத்தை ஏற்றிச்
சிறந்தநற் பாலுடன் சேர்த்
தண்டும் பயறும் இட்டே
சிறந்தநல் மனையாள் செல்வச்
சிறுவர்கள் உறவோர் கூட
பிறந்ததை முதலுள் வானில்
பிறந்தசீர்க் கதிரை ஏத்தி......
"வாழி நீ கதிரே" என்று
வாழ்த்தினன், வையம் எங்கும்
ஆளுக அறங்கள் அன்பின்
ஆட்சியால் இன்பம் நாடிச்
சூழுக என்றே வானின்
கடரவன், சொக்கிமெல்ல
நாளுறு கடமை செல்ல
நடந்தனன், மெல்ல அங்கே.

—இ. நாகராஜன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் அதிர்ஷ்டம் இவருக்குத்தான்

தமிழ் நடிகை 'வெண்ணிற ஆடை' நிர்மலாவுக்குத்தான் இம்முறை பொங்கல் அதிர்ஷ்டம் அடிக்கிறது! [illegible] தமிழ் படவுலகத் [illegible] கொண்டிருந்த [illegible] ஆவதற்கு மக்கள் திலகம் எம். ஜி. ஆருடன் சேர்ந்து நடிக்கும் பொன்னான வாய்ப்புக் கிட்டியிருக்கிறதாம்?


'வெண்ணிற ஆடை'க்குப் பிறகு பத்திரிகைகளுக்கு தமிழ்ப் படவுலகத்திலுள்ள சில தயாரிப்பாளர்களையும், டைரக்டர்களையும் பற்றிய 'திரைமறைவு'ச் சம்பவங்களை எடுத்துக் கூறினார். இவைகளின் 'சான்ஸ்' இல்லாமல் இருந்துவந்த அவருக்கு இனி தொடர்ந்து படங்களில் நடிக்க வலியவே சந்தர்ப்பம் வருமென்று சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

எம். ஜி. ஆருடன் ஜோடியாக ஒரு படத்தில் மட்டும் நடித்துவிட்டால் போதும், ரசிகர்களின் அமோக ஆதரவை அந்த நடிகை பெற்றுவிடலாம் என்பதற்கு உதாரணமாக முன்னுக்கு வந்த பல நடிகைகளிருக்கிறார்கள்!

பொங்கலன்று நிர்மலாவையும், எம். ஜி. ஆரையும் ஜோடி சேர்க்கின்றனர், புதுப்படக் கம்பனியாரான ரத்னா பிலிம்ஸார்.

இப்பொங்கலுடன் அதிர்ஷ்டக்காரியாகும் 'வெண்ணிற ஆடை' நிர்மலா தமிழ்ப் படவுலகப் பொட்டுக் கேட்டைப் பற்றிப் பேசாதிருந்தால் பெரிய நட்சத்திர நடிகையாகி விடுவார்.

- ரேகா



'வேலவனே என்குறையை மன்னித்து என் பொங்கலை ஏற்று அருள்' என்று மீராதேவி வேண்டிக்கொள்வது எஸ். ரி ஆர். பிலிம்ஸ திரைக்கு வரவிருக்கும் 'தங்கவளையல்' படத்தில்தான்.

# எங்கே நிர்மதி? நிம்மதி

"உங்களுக்கென்ன! சிட்டாகப் பறந்து பட்டாடை அணிந்து, பகட்டும் பளபளப்பும் மின்ன எட்டாத உயரத்தில் சஞ்சரிக்கிறீர்கள்! உங்களைப் பார்த்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது. படங்களில் அருமையாக நடிக்கிறீர்கள். உல்லாசமாகப் பொழுது போக்குகிறீர்கள்! உம்... நான் நீங்களாக— அதாவது சரோஜாதேவியாகப் பிறந்திருக்கக் கூடாதா?"—இப்படி எனக்கு ஒரு கடிதம் வந்தது யாரிடமிருந்து தெரியுமா? ஒரு சிறுமியிடமிருந்துதான். அவள் என் அன்பான ரசிகைகளில் ஒருத்தி.

இந்தப் பொங்கல் திருநாளில் அவளுக்காகவே இச்சிறு கட்டுரையை எழுதுகிறேன். ஏனென்றால் அந்தக் குழந்தையுள்ளம் நினைப்பது போல முழுக்க முழுக்க என்னின் வாழ்வு அமைந்திருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. அந்தக் குழந்தை மட்டுமல்ல, வேறு பலரும் அப்படித்தான் நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் உண்மை என்ன?—

எங்களுக்கு ஓய்வு நிம்மதி என்பதேயில்லை. இதோ, இன்றுவரை நான் நன்றாகத் தூங்கி ஒருவார காலத்துக்கு மேலாகிவிட்டது. இரவு பகலில்லாமல் படப்பிடிப்பு. ஓய்வு எடுத்துக்கொண்டால் தயாரிப்பாளர்கள் குறித்த காலத்தில் படத்தை வெளியிட முடியுமா? எங்களுக்குச் சுதந்திரமிருக்கிறதா?

'சிட்டாகப் பறந்து' என்று அந்தச் சிறுமி எழுதியிருந்தாலும், நாங்கள் பறப்பதெல்லாம் படப்பிடிப்புக் கொட்டகைக்குத்தான்! வெளியே தலைகாட்ட முடிவதில்லையே! ஆனாலும்...

நாங்கள் செய்யும் தொழிலிலே எங்களுக்கு நிறைவு இருக்கிறது! அமைதி இருக்கிறது! கடமையைச் சரிவரச் செய்கிறோம் என்ற மனநிறைவு இருக்கிறது. நான் விரும்பி ஏற்றுக்கொண்ட நடிப்புத் தொழிலை மனதாரச் செய்கிறேன். இது என் தாய் நாட்டிற்கு, தமிழுலகத்துக்கு செய்யும் அரிய பணி என நம்புகிறேன். வாழ்க கலை! வாழ்க தமிழ்!!

— சரோஜாதேவி

**கலைப் பொங்கல்**

படைப்பவர்
**ராஜகோபால்**

# பொன்னான பொங்கல்!

ஒவ்வொரு வருடமும் பொங்கல் வருகிறது; மகிழ்வூட்டுகிறது. எல்லாப் பொங்கல்களும் நினைவில் தங்குவதில்லை. ஆனால் என் வாழ்வில் ஒரு பொன்னான பொங்கலைக் கொண்டாடும் வாய்ப்புக் கிட்டியது. என் கலையுலக வாழ்வில் நான் என்றும் மறக்க முடியாத அந்தப் பொங்கலைப் பின்வந்த ஒவ்வொரு பொங்கலுமே நினைவூட்டிவருகின்றன. வருங்காலத்தில் என் வாழ்நாளில் வரும் ஒவ்வொரு பொங்கலும் அந்த இனிய பொங்கலை நினைவூட்டத் தவறாது.

அந்நாளே என் வாழ்வின் பொன்னாள். மண்புகழ் கலைஞானி மாநிலம் புகழ்ந்திட வாழ்ந்து மறைந்த முத்தமிழ்க் கலைஞர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களால் நான் பாராட்டப்பட்டநாள்! பிறர்க்குக் கொடுத்துக் கொடுத்துப் பெருமையடைந்த அந்தக் கையினால் பரிசுபெற்ற திருநாள்.

மக்களிடையே அமோகப் பாராட்டுதலைப் பெற்ற நடிகர் திலகம் நடித்த 'பராசக்தி' ஓடிக்கொண்டிருந்த காலம் அது! அப்படத்தில் திருமதி எம். எல். வசந்தகுமாரியால் பாடப்பட்ட புரட்சிக் கவிஞரின் இனிய பாடல் பலரது பாராட்டுதலையும் பெற்றிருந்த சமயம். 'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிடநாடு' — இதுதான் அந்தப் பாட்டு.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவ்வருடம் கொண்டாடிய பொங்கல் விழாவில் ஒரு சிறிய இசைப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தனர். அப்போட்டியில் நானும் கலந்துகொண்டேன். எனக்கு அப்போது எட்டுவயதிருக்கலாம்.

திரையில் பாடப்பட்ட ராகத்திலிருந்து மாறான ராகங்களில் இசை அமைத்துப் பாடவேண்டும். இதுவே போட்டியின் தலையாய விதி! பலசிறுமியர் பாடினர். என்பெயரும் அழைக்கப்பட்டது. கலைவாணர் என். எஸ். கே. தலைவராக அமர்ந்திருந்தார். எப்படியாவது அவர் கையால் பரிசு வாங்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது.

நான் பாடினேன். எப்படிப் பாடினேன் என்றே தெரியாது. மக்களிடையே கரகோஷம் வானைப் பிளந்தது. பரிசிலைப் பெறப் பின் கலைவாணர் என்னை அழைத்தார். தட்டிக்கொடுத்தார். பாராட்டினார் [illegible] முதல் மாலை வழங்கினார்.

—சந்திரகாந்தா

# காதல் கரும்பு

பூத்த புதுமலர்க் கவர்ச்சியுடன், தனை அலங்கரித்துக் கொண்டு, முகத்திலே மறுமலர்ச்சியுடன், அகத்திலே எழுச்சியுடன், தன் மலர்க்கரங்களில் கரும்பு ஏந்தி மான்குட்டியின் நெஞ்சை அள்ளும் தாவலுடன் அக்கரும்பைச் சுவைக்கச் செய்கிறாள், அந்தக் கன்னிப் பெண்ணுக்கு கரும்பின்மேல் உள்ள காதலை வேறுயாருக்கும் இருக்க முடியாது! கரும்பு போல் தன் காதல் இனிக்கிறதா அல்லது தன் காதலின் இனிமை கரும்பிற்கு வருமா என்ற இன்ப சர்ச்சையில் தான் அவள் மனம் கரும்பைச் சுவைத்துக்கொண்டே ஈடுபடும்!

கரும்புக்கும் காதலுக்கும் அதிக ஒற்றுமை உண்டு. இனிப்பில் இரண்டுக்கும் ஒற்றுமைகாண முடியாது!

—[illegible]



பொங்கல் என்றாலே திருநாள்தான். கொண்டாட்டத்துக்குக் கேட்கவா வேண்டும் காளையை அடக்கியவன்தான் கன்னியைக் கைப்பிடிக்கலாமென்ற பழந்தமிழ்நாட்டில் ஒருமுறை இருந்துவந்தது. இங்கு கன்னியையே அடக்குகிறான் [illegible] எஸ். ரி. ஆர். பிலிம்ஸ திரையிடவிருக்கும் 'திருவிழா' படத்தில் இக்காட்சியைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செந்தமிழ் செழிக்க வந்தயில் தமிழர்
முந்தை நாளில் வந்தனை நாங்கள்
சொற்புறக் கொண்டு நற்பயன் பெற்றார்;
நெற்றி வேர்வை நிலத்திற் சிந்த
மற்றுடன் பூமி பாங்காய்த் திருத்தி
அற்புதப் பல்பொருள் இற்புறஞ் சேர்த்தே
தையும் வந்தது மையிருள் புலர்ந்தது
வாழையுந் தாழையும் வளம்பல தந்தன
கரும்பும் இருப்பும் காண்டகு பாலும்
வீறுசேர் சுற்றமும் விற்பன மகவும்
ஆறுசேர் கணபதி அகிரொலிப் பாற
வெற்றி வேற்கரம் விளங்கும் குமரன்
அன்றிய சுவர்க்க அதிபதி முதல்
தேவரும் மகிழ்த்திப்பியப் பொங்கல்
இங்கிதம் பொலிகென இன்பமாக
மங்கலமாக வாழ்த்தி இட்டிடவன்
வாழ்குவக் காமும் வளரடுன் மன்னியே.

புலவர் சிகாமணி
- வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் -

# மங்கலப் பொங்கல்





பொங்கலோ பொங்கல் பொங்கி வருதம்மா, தை பிறந்துவிட்டது. குடும்பத்தில் குதூகலத்துக்குச் சொல்லவா வேண்டும்.


## பொங்கல் வாழ்த்துக்கள்!

எமது பாலக்காடு (ஆர். வி. கவுடர்) ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளர்களுக்கும்,
பாவிப்பாளர்களுக்கும், எமது தொழிலாளர்களுக்கும்
மற்றும் ஆதரவாளர்களுக்கும்
எங்கள் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

தயாரிப்பாளர்கள் :

வ. வ. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்
(ஆர். வி. கவுடர்)

# ஆர். வி. ஜி. பீடி கம்பனி

விற்பனை நிலையம் :
34, மானிப்பாய் வீதி,
தொலை பேசி: 231

தலைமை அலுவலகம்: 47, பீச் றோட்,
யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 230


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.